திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஆறுமுகப் பெருமான், திருச்செந்தூர்.

மாலை 12] சௌமிய—தை—பிப்ரவரி, 1970 [மணி 5

7/70 ரு. 16/2/ 146

தமிழ் நாடு அரசின் அறநிலைய



இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி கோயிலுக்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு. திரு. வி. வி. கிரி அவர்களும், அவர்தம் அருமைத் துணைவியார் அவர்களும், வரவேற்றுச் சிறப்பிக்கப்பெறுதல் (19—11—69).

பொருளடக்கம்

1. திருப்பாவைச் சிறப்பு
2. காவியத் திருநாள்
3. ஞானியார் சுவாமிகளும், மணிவாசகரும்
4. அறிவியலும் இறையியலும்
5. "ஒன்றென்றிரு; தெய்வம் உண்டு என்றிரு"
6. தித்திக்கும் திருக்கோவையார்
7. திருமந்திர மாலை
8. திருவள்ளுவரது கடவுட் கொள்கை
9. மகாபாரதம்
10. திருப்பாவை ஜீயர்

மூவண்ணப் படம்: ஸ்ரீ மகாலிங்க சுவாமி, திருவிடைமருதூர்.
அன்பளிப்பு: இந்து தர்ம மன்றம், சென்னை-17.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

7/70.64



மாலை 12] சௌமிய — தை — பிப்ரவரி, 1970 [மணி 5

திருப்பாவைச் சிறப்பு

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

மாதங்களிற் சிறந்தது மார்கழி மாதம். மிகு வெப்பமோ, மிகு குளிர்ச்சியோ இல்லாதது. நாளுக்கு வைகறை நேரம் போல, ஆண்டுக்கு மிகவும் சிறந்த மாதம் மார்கழி. 'மாதங்களில் நான் மார்கழி ஆகின்றேன்' என்று கீதையிற் கண்ணபிரான் அருளிச் செய்திருப்பதனால், 'வைஷ்ணவமான மாதம்' என்றும், மற்றவர்களைக் காட்டிலும் பெருமாளுக்கு உள்ள ஏற்றம் போல, மாதங்கள் எல்லாவற்றுக்கும் ஏற்றம் மிக்க மாதம் என்றும், பெரியோர்கள் இதன் சிறப்பைப் புகழ்ந்து போற்றுவர்.

பாவை நோன்பு :

மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் துயில் எழுந்து, நீர்நிலைக்குச் சென்று நீராடி, மணலால் ஸ்ரீ காத்யாயநீ தேவியின் திருவுருவம் (பாவை) சமைத்துச், சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் ஆகியவற்றாலும், மற்றும் பல சிறந்த நைவேத்தியங்களாலும் வழிபட்டு, உலகநலங்கருதி மழைபொழிதற் பொருட்டும், தம்நலம் கருதித் தமக்கு ஏற்ற இனிய கணவர் வாய்த்தற் பொருட்டும், இளம் மகளிர் ஆகிய பாவையர் தேவியை வேண்டிக் கொள்வர்.

'நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்'
'நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்'
'பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்'

என ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவைத் தொடர்களில், 'பாவை'

[ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வேங்கடாசலபதி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை விழாவில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (1-1-1970).
— ஆசிரியர்.]

என்பது தேவியின் திருவுருவத்தைக் குறித்து நிற்றல் காணலாம். 'பாவை' என்பது 'கொல்லிப்பாவை' என்பதுபோல, ஈண்டுப் பெண்தெய்வத்தின் பிரதிமை ஆகிய திருவுருவத்தைக் குறிக்கும். பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்பு (வழிபாடு) 'பாவை நோன்பு' எனப் பெயர் பெற்றது. 'பாவையர்' ஆகிய இளம் பெண்களால் நோற்கப்படுதல் பற்றிப் 'பாவை நோன்பு' என வழங்குவதாயிற்று எனினுமாம்.

158576

மேலையார் செய்வனகள் :

இங்ஙனம் சிஷ்டாசார சித்தமாய் 'மேலையார் செய்வனகள்' என்றபடி, தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப் பெற்றுவரும் பாவை நோன்பு பற்றிய பாடல்கள் ஆதல்பற்றியே, திருப்பாவை திருவெம்பாவை என்னும் பெயர்கள்ஏற்பட்டன. பெயருக்கு ஏற்ப இந்நூல்களின் ஒவ்வொரு பாடலும் 'எம்பாவாய்' என்னும் தொடரினை ஈற்றிற் கொண்டு முடிகின்றது. ஆதலின் இன்னோரன்ன பாடல்களைப் பாவைப் பாட்டு என்று முன்னோர்கள் வழங்கியுள்ளனர். சைவ வைஷ்ணவ சமய மக்களால் மட்டுமேயன்றி, ஜைன பௌத்த சமயங்களைச் சேர்ந்த மக்களாலும், 'பாவைப்பாட்டு' இயற்றப் பெற்றுப் போற்றப்பட்டமை, யாப்பருங்கல விருத்தி முதலிய தமிழிலக்கண நூல்களாற் புலனாகின்றது. பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை' என்னும் நூலின்கண் 'சொரூபானந்தர் திருவெம்பாவைகள்' வேதாந்தபரமாக அமைந்து விளங்குகின்றன. மேலும், கடல்கடந்த சயாம் கம்போடியா முதலிய பிறநாடுகளிலும்கூட, இந்நூல்கள் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப் பட்டு வரும் செய்திகள் அறியப்படுகின்றன.

ஆண்டாள் நாச்சியார் :

ஒரு நூலுக்குரிய சிறப்பு, சொல்வோன் - சொல்லும் பொருள் - சொல்லும் முறை என்னும் மூவகைச் சிறப்புக்கள்பற்றி அமையும். இவற்றை விஷய வைலட்சண்யம், வக்த்ரு வைலட்சண்யம், பிரபந்த வைலட்சண்யம் என வழங்குவர். திருப்பாவையை அருளிச் செய்த ஆண்டாள் நாச்சியாரின் அளப்பரும் சிறப்புக்களை 'வியாக்கியான கர்த்தாக்கள்' ஆகிய உரையாசிரியர்கள், பலவகைகளில் விதந்து விளக்கியருளியுள்ளனர்.

(1) பிறரெல்லாம் இந்நிலவுலகிற் பிறந்து வளர்ந்து படிப்படியே சிறிது சிறிதாக அறிவும் ஒழுக்கமும் ஞானமும் பக்தியும் வளரப்பெறுவர். ஆண்டாள் அத்தகையவள் அல்லள். அவள் திருத்துழாய் போன்றவள். பிற செடிகள் எல்லாம் முளைத்து வளர்ந்து தளிர்த்து முகிழ்த்து அரும்பிப் போதாகிப் பூத்தபின்னரே மணம் கமழத் தொடங்கும். ஆனால் திருத்துழாயோ, அங்ஙனம் இன்றி முளைக்கும் போதே நறுமணம் கமழப் பரிமளத்தோடே கூட முளைக்கும். அதுபோல, ஆண்டாளும் பால்ய யௌவனப் பருவங்கள் தோறும் பெருகி வளர்ந்தோங்குகின்ற பரபக்தி பரஞானம் பரமபக்திகளைத் தான் உதித்தருளுகின்ற பொழுதே மிகுதியாகப் பெற்றிருந்தாள்.

முன்பு திரேதாயுகத்தில், விதேகதேசத்தில், மிதிலைமாநகரில் ஜனகமகாராஜன் யாகசாலை அமைத்தற்பொருட்டுக் கலப்பைகொண்டு பூமியை உழுகையில், அவ்வுழுபடைச் சாலிலே சீதேவியின் அம்சமாக ஜானகி என்னும் சீதைப் பிராட்டி தோன்றியருளினாள். அதுபோல, கலியுகத்திற் பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருத்துழாய்ப் பாத்தி அமைத்தற் பொருட்டுக் களைக் கொட்டுக் கொண்டு, திருநந்தவனத்தைக் கொத்துகையில், அக்கொத்தின நிலத்திலே சீதேவி பூதேவிகளின் அம்சமாகக் கோதை என்னும் ஆண்டாள் தோன்றியருளினாள்.

(2) பகவத் விஷயப் பிராவண்யம், ஏனைய எல்லா ஆழ்வார்களைக் காட்டிலும், இவளுக்கு மிகவும் அதிசயித்திருக்கும். பத்து ஆழ்வார்களுடைய சாரபூதையாகத் திகழ்பவள் ஆண்டாள். ஆழ்வார்கள் பதின்மருடைய ஞானமும் தேங்கித் திரண்டு சீதனமாக, இவள் பக்கலிலேயே குடிகொண்டது. பத்துப்பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே.

(3) ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர்வற மதிநலம் அருளவேண்டியிருந்தது. ஆனால் 'உம்பர்கோமானே உறங்காது எழுந்திராய்!' என்றும், 'உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்' என்றும்,

N70·12.5 (146)

அவனைத் துயிலெழுப்பி விண்ணப்பம் செய்கையால், இவள்தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலம் அருளினாள்.

(4) உலகியல் வாழ்விலே உறங்கிக் கிடந்த தங்களை எழுப்பி, எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டவர்கள் ஆழ்வார்கள். ஆனால் இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே ஆழ்வார்களைக் காட்டிலும் இவளே மேலானவள். திருமாலைத் தன் குழலின் நறுமாலையாலே மயங்கிக் கட்டுண்ணச் செய்தவள் இவள்.

(5) மேலும் ஆடவன் ஆடவனைக்கண்டு காமுறுதலினும், பெண் ஆடவனைக்கண்டு காதலிப்பதே இயற்கைநெறிக்கு இயைந்த தாய்ப் பள்ளமடை போலச் சிறந்து பெருகித் திகழும். ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரமபக்தியுடையவள் ஆண்டாள். ஆதல்பற்றியே ''ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையள்'' என்றும், 'பிஞ்சாய்ப் பழுத்தாள்' என்றும், ஆண்டாள் போற்றப் பெறுவாளாயினள்.

(6) ஆண்டாளின் அளப்பருஞ் சிறப்பினைப் பின்வருமாறு பெரியவாச்சான் பிள்ளை என்னும் பெருந்தகையார் விளக்கியருள்கின்றார். தேகத்தையே ஆத்மாவாக நினைத்துக் கொண்டு, ஆக்கைக்கே இரைதேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிகின்ற உலகியல் மக்களுக்கும், ஆன்மசொரூபம் உணர்ந்து கைவந்த மகரிஷிகளுக்கும் உள்ள வேற்றுமை, பர்வதத்திற்கும் பரமாணுவுக்கும் இடையேயுள்ள வேற்றுமை போன்றதாகும். மகரிஷிகள் ஆழ்வார்களை நோக்க, ஆழ்வார்கள் பர்வதம் போல விளங்க, தாங்கள் பரமாணுவாக மாறி விடுவார்கள்.

அத்தகைய ஆழ்வார்கள் தாமும், பெரியாழ்வார் முன்னிலையில், பரமாணுவாக மாறிவிட, அவர்களுக்குப் பெரியாழ்வார் பர்வதம் போலும் நிலையிற் பெருஞ்சிறப்புடையவராகப் பிறங்குவார். ''மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றிப் பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்'' என்பது மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தின மாலைச் செய்யுள். ''ஆழ்வார்கள் எல்லாரையும்போல் அல்லர் பெரியாழ்வார். அவர்களுக்கு அது காதாசித்கம்; இவர்க்கு இது நித்யம். அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்கு மேடாக இருக்கும்'' என்பது பிள்ளைலோகாசார்யர் அருளிய ஸ்ரீ வசநபூடணம்.

இத்தகைய பெரியாழ்வாரும்கூட, மிகச் சிறிய பரமாணுவாகிவிட, மிகப்பெரிய பர்வதம் போல விளங்கும் நிலையில், அளப்பரிய பெருஞ்சிறப்புடையவளாக அமைந்து திகழ்பவள் ஆண்டாள். பிராட்டியே ஆண்டாளாக வந்து பிறந்தருளினாள். எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் தன் அடிக் கீழ்ப் படுத்தி ஆள்பவன் ஆண்டவன்; அவனையே தனக்குரிமைப்படுத்தி ஆண்டு கொண்டவள் ஆண்டாள்!

திருப்பாவை :

இனைய பெருமை வாய்ந்த ஆண்டாள், தான் பிராம்மணியாய் இருந்துவைத்தும், யாகத்திலே விரதத்தை மேற்கொண்டவர்கள் தேவதத்தன் முதலிய தத்தமது இயற்பெயர்களைத் தவிர்த்து, 'எஜமானன்' 'அத்வர்யு' 'ஓதா' முதலிய பெயர்களைக் கொள்ளுவது போல, ஸ்ரீ வில்லிபுத்தூரே ஆயர்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடையர்குலப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கிருஷ்ணனாகவும் அநுசந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் ஆயர்பாடியிலே குடிபோய், நினைவின் முதிர்ச்சியாலே அநுகாரம் முற்றி அவைதானேயாய், இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய் மாறி நின்று, ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை என்னும் இந்நூலை அருளிச் செய்கின்றாள்.

திருப்பாவையின் சிறப்பு :

(1) பாவைப்பாட்டு நூல்களுள், திருப்பாவையின் சிறப்பு மிகவும் பெரிது. எம்பெருமானாரை, ''ஓர் உரு திருப்பாவைக்குப் பொருள் அருளிச் செய்யவேண்டும்'' என்று அன்பர் ஒருவர் வேண்டிக்கொள்ள, அதற்கு அவர் ''திருப்பல்லாண்டுக்கு ஆள்கிடைக்கிலும்

திருப்பாவைக்கு ஆள் கிடையாது'' என்று திருவாய் மலர்ந்தருளினர் எனத் திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறுகின்றது.

(2) 'பிராட்டி ஆண்டாள் ஆனற்போலே உபநிஷத்து தமிழானபடி' என்று திருப்பாவை யின் சிறப்பை, அழகிய மணவாளச்சீயர் விளக்குகின்ருர்.

(3) பஞ்சலட்சம் குடியிற் பெண்கள் திரள்திரளாக அநுபவித்ததுபோல, பக்த பாகவதர்கள் திரள் திரளாகக் கூடியிருந்து அநுபவிக்க வேண்டிய பிரபந்தம் ஆதலின், இது 'சங்கத்தமிழ் மாலை' என்று போற்றப்பெறும்.

(4) திருப்பாவை பாதகங்கள் தீர்க்கும்; பரமன் அடிகாட்டும்; வேதம் அனைத்துக்கும் வித்தாகும். ஆதலின் சுவாமி எம்பெருமானர் என்னும் இராமாநுசர், இதன்பால் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். ஆதல்பற்றி, இராமாநுசருக்குத் ''திருப்பாவை ஜீயர்'' என்றே ஒரு சிறப்புப் பெயர் உண்டு.

(5) ''உந்துமத களிற்றன் ஓடாத தோள்வலியன்'' என்னும் திருப்பாவைப் பாடலை, எம்பெருமானர் பெரிதும் உவந்த பாட்டு என்பர். அதற்கு ஒரு வரலாறும் கூறுவர். எம்பெருமானர் திருப்பாவை ஓதிக் கொண்டே மாதுகரத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் அடைவில், ஒருநாள் பெரியநம்பிகள் திருமாளிகைக்கு எழுந்தருளினர். அப்போது கதவு சாத்தியிருந்தது. எம்பெருமானரின் குரலோசையைக் கேட்டுப் பெரியநம்பியின் திருமகளார் ஆகிய அத்துழாய் அம்மையார், அக்கதவைத் திறந்தருளினர். அவ்வளவில் அவளைக் கண்டவாறே எம்பெருமானர் மூர்ச்சித்து விழுந்தார். அதுகண்டு அஞ்சி, அத்துழாய் அம்மை பெரியநம்பிகளின் பக்கலிற் சென்று, 'ஐயா! கதவைத் திறந்து சென்றேன். என்னைக்கண்டதுமே ஜீயர் மூர்ச்சித்து விழுந்தார்'' என்ருள். நம்பிகள் முற்றுணர்வினர் ஆகையாலே 'உந்தும் மதகளிறு' அநுசந்தானமாக இருக்க அடுக்கும் என்ருர். அதனைக் கேட்ட அத்துழாய் 'ஆவதென்?' என்ருர். 'செந்தாமரைக் கையால் சீரார் வளைஒலிப்ப வந்து திறவாய்' என்று ஓதாநிற்க, நீ திறந்த வாறே உன்னைக்கண்டு, ''நப்பின்னையைச் சேவிக்கப் பெற்றேன் என்று மூர்ச்சித்தார் ஆகவேணும்'' என்று நம்பிகள் அருளிச் செய்தார் என்பது வரலாறு.

(6) திருப்பாவைக்குத் திருநாராயண புரம் 'ஆய்' எனும் ஜநந்யாசாரிய சுவாமிகள் அருளிய ஈராயிரப்படியும்; 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' என்னும் புகழ்பெற்ற பெரிய வாச்சான் பிள்ளை அவர்கள் வகுத்த மூவாயிரப் படியும்; அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் இயற்றிய ஆருயிரப்படியும்; சுத்தசத்துவம் தொட்டாசாரியார், வானமாமலைஜீயர் ஆகியோர் செய்தருளிய சுவாபதேச வியாக்கியானங்களும்; வழங்கிவருகின்றன. மொழிக்கு மொழி தித்திப்பாகவும், சொல்லுக்குச் சொல் அழகு ஏறும்படியும் உள்ள இவ்விரிவுரைகளால், திருப்பாவையின் சொற்பொருட் சுவை நலங்கள் பெருகி நிற்கின்றன.

பொருள் நலம் :

(1) இத் திருப்பாவையில் வேதப் பொருள் அனைத்தும் சொல்லப்பெற்றுள்ளன. இராமாநுசர் இதனை 'நித்தியக் கிரந்தம்' என்பர். வேதாந்த தேசிகர் 'சற்சன ரட்சை' என விளம்புவர். 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று திருமந்திரத்தில் பதத்திரயத்திலும் பிரதிபாதிக்கின்ற சொரூப-உபாய-புருஷார்த்தங்கள் மூன்றும், ஒவ்வொன்றே பத்துப்பாட்டாய்ப் பரவும்படியே, திருப்பாவை முப்பது பாட்டாகப் பாடியருளிற்று.

(2) மேலும் ஒவ்வொரு வைணவரும் அறிந்துகொள்ளத் தக்க **'அர்த்த பஞ்சகம்'** என்னும் மிக்க இறைநிலை,மெய்யாம் உயிர்நிலை, தக்கநெறி, தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை, வாழ்வினை என்னும் ஐந்தும், இதன்கண் குறிக்கப்பெற்றுள்ளன.

(3) திருமந்திரம், துவயம், சரம சுலோகம்-என்னும் மூன்றின் பொருளும், இதன்கண் இனிது விளக்கப் பெற்றிருக்கின்றன.

(4) எம்பெருமானின் பரத்துவம் வியூகம் விபவம் அந்தர்யாமித்துவம் அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து நிலைகளின் இயல்புகளும், இந்நூலில் செவ்விதிற் சுட்டப்பெற்றுள்ளன.

(5) தத்துவம்-இதம்-புருஷார்த்தம் என்னும் மூன்று பொருள்களும்கூட, இந்நூலில் நன்கெடுத்து இயம்பப்பட்டிருக்கின்றன.

(6) மேலும் குண ஒப்புமையாலும், கௌரவ்யதையாலும், பத்துப் பெண்களை எழுப்புகிற முகத்தாலே, பொய்கை பேய் பூதம் திருமழிசை குலசேகரர் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடி திருப்பாண் சடகோபர் திருமங்கை மன்னர் என்னும் ஆழ்வார்கள் பதின்மரையும் எழுப்பி உடன்கூட்டிக் கொண்டு, ஆண்டாள் பெருமாளோடு கூடிக்கலத்தல் ஆகிய நீராடலுக்குச் செல்வதனைச் சொல்கின்றது இத்திருப்பாவை.

''இங்ஙனம் குருபரம்பரா பூர்வகமான துவயத்தில் பேருகப் பிரதிபாதிக்கிறதாய் இறே திருப்பாவைதான் இருப்பது. ஆதலால் அன்றே, இதற்கு வர்த்தகரான உடையவரும் இத்தை நாள்தோறும் ஆதரித்துக்கொண்டு போந்தருளிற்று'' என்பது திருப்பாவை வியாக்கியானம்.

(7) இந்நூல்தான், திருமந்திரமும் திருப்பல்லாண்டும் போலே சுருங்கியிருத்தல், வேதமும் திருவாய்மொழியும் போல விரிந்திருத்தல் ஆகிய இரண்டும் இன்றி, வேண்டுமவையெல்லாம் மிகுதி குறையின்றிச் செவ்விதின் அமைந்துள்ளது.

(8) ''கன்றிழந்த தலைநாகு தோற்கன்றுக்கும் இரங்குமாறுபோல, இப்பாசுரம் கொண்டுபுக, நமக்கும் இறைவனருள் பலிக்கும்'' என்றும்; ''விடிவோறே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுசந்தித்தல்; மாட்டிற்றிலனுகில் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாட்டை அநுசந்தித்தல்; அதுவும் மாட்டிற்றிலனுகில் நாம் இருந்த இருப்பை நினைப்பது'' என்றும் பட்டர் அருளிச் செய்தார்.

முடிவுரை :

ஆதலின், பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன, சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே, இங்கு இப்பரிசு உரைத்து, ஈரிரண்டு மால்வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால், எங்கும் திருவருள் பெற்று, நாம் இன்புறுவோமாக!

— ஆசிரியர்.



திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலைச் சேர்ந்த ஓய்வு விடுதிக்கு அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. கே. எஸ். நரசிம்மன் B. A., B. L., I. A. S., அவர்கள் அடிக்கல் நாட்டுதல். (22-11-69)

காவியத் திருநாள்

தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு, கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்கள்

[சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தில், சௌமிய ஆண்டுத் தைப் பொங்கல் திருநாள் (14-1-70) அன்று நிகழ்ந்த "அன்புப் போர்முரசு" என்னும் கவிதையரங்கத்திற்குத் தலைமை வகித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பாடிய சிறந்த செந்தமிழ்க் கவிதை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

— ஆசிரியர்]

வாவி, குளம், வாய்க்கால்கள் நீரெல்லாம்
ஆவியாகி வறட்சிப்புயல் வந்துற்றுப் பயிரெல்லாம்
சாவியாகிப் போனநிலை கண்டுவிட்டுத் தமிழரசு
தாவியோடித் திடுதிடென வெப்பத்துயர் தணித்ததாலும்,
ஓவிய முகில் அனைத்தும் கருக்கொண்டு புவி
மேவிய மழைக்குழந்தை ஈன்றதாலும்,

உணவுக் கட்டுப்பாடென்று முன்பு

ஏவிய அரசாணை திரும்பப் பெற்று - இன்பக்
காவியத் திருநாளாம் பொங்கலன்று - அற்றைக்
கூவிய குயில்கள் எல்லாம் மீண்டும் கூவ - மக்கள்
தூவிய மலர்மலைமேல் மாத்தமிழாள் நடந்துவர - நம்
மாநிலத்து மாந்தரெல்லாம்
மா பலா வாழையென்னும் முக்கனியின் சுவையூடே

தித்திப்புப் பொங்கல் தின்றிடவே வேண்டுமென்று - எம்
சக்திக்கு ஏற்றவாறு உழைக்கின்றோம் - சற்று
புத்திக்கும் கூர்மை தீட்டக் கவியரங்கச் சாணைக்கல் பக்கம்
வாவென்றார் வானொலியார்...

இருப்பதாலே வந்துற்றேன்...
புத்தி இருப்பதாலே வந்துற்றேன்...
கூர் ஏற்றிக் கொள்வதற்கு...!
சீர் ஏத்திப் பாடுகின்ற செந்தமிழர்
வேர் ஒற்றிக் கிடக்கின்ற பலாக் கருத்தைச்

சுளைசுளையாய் எடுத்து வைக்கச் சுற்றுமுள்ளார்...
தளை தொடையாம் யாப்பெல்லாம் கற்றிலன் நான் ;
வளையணியாப் பெண்கரம் போல்
வடித்தளிப்பேன் சில பாடல்.
பொறுத்தருள்வீர் புலவர் ஏறே !

அழகு தமிழ்ப் பொங்கல் நாளில்...
அன்புப் போர்முரசு எனுந் தலைப்பில்
அறுவர் இதோ பாட வந்தீர் ; அய்யன்மீர் !
குகனோடும் ஐவரானோம் என்றதுபோல் - இந்தத் தமிழ்
மகனோடும் எழுவர் என எண்ணிக் கொள்க...

எழுவர் நாம் இவ்வரங்கில்...
எழுவர் தமிழர் என்றே
உழவர்நாள் கொடியேற்றுகின்றோம்.
மழவர் நிலம் காப்பதற்கு
மார்தட்டிச் சூள் உரைக்கின்றோம் !...
பொங்குக பால் என்று முழங்குகின்றோம்... இந்நாளில் அது
பசும்பாலா ?...

பைந் தமிழ்த்தேர்ப்பாகன் தந்த பால்...
அறத்துப் பால்
பொருட்பால்
காமத்துப் பால் ... அதற்கும் அப்பால்
வேறென்ன பால் பொங்க வேண்டும் ?..,

கன்னல் கொண்டுவா என்றால் சுவைப்பதற்கு ... அவளோ பிள்ளைக்
கனிமொழியைத் தூக்கித் தருகின்றாள்... அதுதான் இன்பம் !
வாங்கி வருக மஞ்சள் என்றாள்...அதனை
வழித்திடலாம் உன் முகத்தில் என்றேன்...
என்வீட்டு மகிழ்ச்சி கண்டு
எதிர்வீட்டார் இஞ்சி தின்னல் ஆகாதென்று - அதனை
வேரோடு பிடுங்கிப் பொங்கல்
வேகின்ற பானையிலே கட்டுதல் இந்நாட் சிறப்பாம் !

முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல்
உண்டு; மாடுபிடிக்கத் தோள்
தட்டுகின்ற வீரர்க்கும் பொங்கல் உண்டு...
காளைதனை வென்றவனே எனக்கேற்ற காளையெனப்
பாளைநகைப் பாவையவள் பகர்ந்ததெலாம் பழைய
நாளை நினைப்பூட்டும் இலக்கியமாம் !

ஒளிவரவால் இருள் மறையும்
உளிவரைந்த சிற்பங்கள் பளபளக்கும்...
களிநடன மயில்களெல்லாம் கலாபம் காட்டும்...
தெளிதேன் தருகஎன இழுத்திடுவான் குஞ்சி;
துளிதேன் தந்துவிட்டுப் பறந்திடுவாள் வஞ்சி.
பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்;
எதையும் அன்பால் அணுகி வென்றிட
உதயக் கதிரோன் உயர்ந்தான் இன்று !...

பார்த்தீரோ பசுமை வெள்ளம் !...
பச்சைப்பாய் விரித்ததுபோல் காட்சி காணீர் !
சிந்துபாடும் சிறுநதியின் சிரிப்பொலி கேள்...
சீறிவரும் வனவேங்கைக் காட்டாற்றுத் தண்ணீர்
மீறிவர வொண்ணுமோ அணைகள் தாண்டி !
கடன்பெற்று வேளாண்மை செய்ய வந்த முயற்சிக்கெல்லாம்
உடன்பட்டு உறுதுணையாய் நிற்கும் அரசின் நெறிகாண்க!...
உரம் மலிவாய் வழங்குதற்கும் - ஈகைக்
கரம் வேண்டும் அன்றோ ; அதனைத்
தரம் அறிந்து அண்ணன் தந்துவிட்டே போயுள்ளார்...

சிரம்ஆட்டி எமை ஏற்காமல் (அரசில்) சிலர் ஓட்டைகளைக்
காட்டிடுவார் - நாத
சுரம் காட்டுகின்ற ஓட்டையெல்லாம் நல்லிசைக்கே என்றிடுவேன்...
அசையும் விரலாக நீர் இருந்தால்
இசையும் தென்றலாய் மாறிவிடும் இற்றை நாளில் !
வான்முட்ட எழுந்து நிற்கும் ஆலையிலே
தான்மட்டும் வாழுவதற்குச் சிலர் இருந்தால்
பேன்பிடித்த தலையாகும் நமது நாடு ...
நான் படித்த மருந்து அதற்குச் சமதர்மந்தான்...
அந்நிலைதான் வருதல் மட்டும்...
இந்நிலையில் உழைப்போர் வாழ ...
வகை காணல் மிகவும் நன்று ,., அதற்கு
வாய்திறந்து சூளுரைப்போம் இன்று !

பூட்டுப் போடவில்லை பொதுவுடைமைக் கொள்கைதனைப்
புறக்கணித்துப் பேசவில்லை......
ஏட்டுக்குள் இருக்கின்ற அக்குறிக்கோள்
நாட்டுக்குள் மெல்ல மெல்ல வந்தேதான் தீர வேண்டும்.,.சமதர்மப்
பாட்டுக்குள் பொதிந்துள்ள கருத்தெல்லாம்

பரவுமுன்னே; பாங்காகத் தொழில் அமைய - நம்நாட்டில்
கூட்டான அமைப்புக்கள் பெருகிடவே
பொங்கல் நாளில் புதியபாதை ஏற்றிடுவோம்!
இனியபாதை இதை இடைக்காலப் பாதைஎன்போம் - பின்னர்
கனிய வைப்போம் கற்களையே!..,
உழவரது வியர்வையினுல் சூல்கொண்ட, கழனித்தாய் தன்வயிற்றில்
மகளாய் வந்து

அனைவரது பாராட்டும் பெற்றுக்கொண்ட கதிராம் மங்கை
மணவறையிற் பெண்போலத் தலைகுனிந்து நிற்கின்றாள்;
பொங்கல்நாளில்

MADRAS RECORD OFFICE BUILDINGS

தமிழர் என்போர் மகிழ்கின்றார்,.,
தைதை என்றே குதிக்கின்றார்...
தண்ணொளி சேர்ப்பது தையன்றோ...
தையல் என்றால் பெண்ணன்றோ!
தைப்பதும் ஒருவகைத் தொழிலன்றோ...
முள்ளாய்த் தைப்பார் சிலபேர்கள்...நமக்குக்
குல்லாய் தைப்பார் சிலபேர்கள்;
தமிழர் என்போர் மகிழ்கின்றார்
தைதை என்றே குதிக்கின்றார்...
என்னைக்
கவி,தை என்றே அழைக்கின்றார்...

தைத்தல் எனது தொழில் அல்ல;
புதைத்தல் எனது தொழில் என்பேன்.
தீமையைப் புதைத்தல் தீதறு செயலாம்...இய
லாமையைப் புதைத்தல் இனிப்புறு தொழிலாம்...அறி
யாமையைப் புதைத்தல் அறிவார் தொழிலாம்...
ஊமைகள் வாழ உயிரைக் கொடுத்த
உத்தமன்காலில் முகத்தைப் புதைத்தல் எந்தன் தொழிலாம்!

பட்டா இருலட்சம் பெற்றவர்கள் வாழ்த்துகின்றார்...
தட்டாமல் தண்ணீர் தருவதற்கும் திட்டமிட்டு
எட்டாத பழமென்று இருந்தோர்க்கும் வளவங்கி
முட்டாது கடன்தரவே தனிமுயற்சி
கிட்டாதோ அதிகாரி பார்வையென அலைந்ததுயர்
வெட்டாது வெட்டியின்று மாதம் ஓர்நாள்
கட்டாயம் சிற்றூர் சென்று மனுநீதி வழங்குகின்றோம்.

பொன்சாரம் இட்டழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எழுபத்தி ரண்டுக்குள் எங்கணுமே மின் இணைப்பு
என்தமிழ்த் திருநாட்டில் ஏற்படவே உழைக்கின்றோம்.

இவையெல்லாம் புகழ்ந்துரைத்துப் பொங்கல் நாளில்
தொகைதொகையாய் மாலே வேண்டாம் - பரிசு வேண்டாம்
அவைப்புலவீர் அழகுறவே ஓர்பாட்டு நீர் பாடின்
பகைப்புலம் ஒழித்த பாண்டியன்போல் நிமிர்ந்து நிற்பேன்!
குகைப்புலியை முறத்தாலே எதிர்த்த நாட்டில்
திகைப்புற்று நிற்போமோ வன்முறையை வீழ்த்திக்காட்ட,
புகைக்கருத்து போக்கிவிட்டுப் புதுக்கருத்து போற்றிடுவோம்
பொங்கல்நாளில் !

கிழங்கள் -
சிகை கருத்தால் சாயப்பூச்சு என்று சொல்வோம்-
நகைகருத்தால் போலியென்று புரிந்துகொள்வோம் - பொய்யர்தம்
மிகைக் கருத்தை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளல் தீதே அன்ருே?
இலக்கியங்கள் பயின்ற நல்லோர்
இன்தமிழ்செய் கவிதை வல்லோர்,
இருமூன்று தலைப்புகளில் கவிகள்பாடித்
தரும்ஊன்று கோலாகத் தந்திடுவார் தமிழர்வாழ !

தன்னலப் பேராசைதான்
உட்பகைக்கு ஆணிவேராம்;
வன்முறையும் வளர்ந்துவிடும் கிளைகளாக !
ஒற்றுமை யின்மையினல்
உதயமாவதுதான் ஏற்றத் தாழ்வாகும்,..
இத்தனைக்கும் அறிவின் வறுமைதான் காரணமாம் - எனப்
புத்தரது எண்ணங்கள் தந்திடுவார்
சத்தனைய நற்கவிஞர் !

வறுமைதனை விரட்டிடவே இயக்கம் காண
அருமைமிகு நேரமென்பார் சிலபெரியோர்
எருமையன்ருே வேகத்தில் வறுமைப்பேயும்
எட்டடிகொடுத்தால் எடுத்தடியும் வைத்திடாதே!
விரட்டினல் திரும்பிவரும்
மிரட்டினல் மீண்டும்வரும் வாய்மைக்
குறட்டினல் பல்பிடுங்கி வீழ்த்திவிட்டால்
புரட்டினலும் எழுந்திடாத உடலாகும் உயிரற்று !
வறுமையிலே கற்பனைகள் செழிக்குமென்பார்
முத்துமுத்தாய்க் கவிபிறக்கும் என நவில்வார் !
சத்திமுத்தப் புலவரையும்
சாத்தக் கவிராயரையும்
நித்தம்நித்தம் அலைகின்ற பாணரையும்
கொத்துக் கொத்தாய் உதாரணங்கள் தந்திடுவார் !

செழிப்பினிலே கவிபிறந்த கதையுந்தான் மெத்தஉண்டு
மன்னன் அதிவீரராமன் என்ன?
தென்னவனும் பாண்டிய வேந்தன் என்ன?
கன்னல்மொழிக் கனிப்புலவச் சிங்கமன்றோ?
வறுமையினல் கவிபெருகும் என்று சொல்வோர்
வளமையினே ஏழைக்கு அனுமதியாப் பெருஞ்செல்வர்!
இதனையெலாம்
புலமையினல் புலப்படுத்தத்
திறமைமிகு கி. வா. ஜ. வந்திடுக !
(வறுமை பற்றிக் கி. வா. ஜ. பாடி முடித்ததும்)

வறுமை அகன்றது வாட்டம் தீர்ந்தது
அருமை அருமை அன்பரின் கவியெனக்
கருமை விழிகள் விரிந்திடப் புகழ்வோம் ! அதற்குள்
கொடுமையொன்று புகுந்திடக் கண்டோம் ! நெஞ்சை
அடிமை கொண்டிடும் தன்னல மாயை
பேராசை யுடனே வருவதை எதிர்த்துப்
பேராசை யுடனே கணைகள் தொடுக்கச்
சீரார்புலவர் அப்துல் கபூரும்
கூராய்த் தமிழைக் கொண்டே வருவார் !
(தன்னலப் பேராசைப் பற்றி அப்துல் கபூர் பாடி முடித்ததும்)

சென்று சென்று மீண்டுவரும் தன்னலத்தைச்
செந்தமிழால் சாடியது
நன்று நன்று நன்றே யென்போம்.

அடுத்து;
உட்பகையை ஒருகை பார்ப்போம் !
கட்புலனில் எட்டாது காய்இலையில் மறைதல்போல்
நட்பிடையே தோன்றுமிது —
நாளும்ஒரு வடிவெடுக்கும்
தேளும் வெட்க விஷம் கலக்கும் !
வாளும் வாளும் உரசுவது வெளிப் பகையாம்.
தோளும் தோளும் இணைந்திருக்கத்
துரோகச் செயல் புரிவதுதான் உட்பகையாம்.
அப்பகையைத் தேடுதற்கும்
அதைக் கண்டவுடன் சாய்ப்பதற்கும்
தீரனுண்டு கவியரங்கில்
தூரன் என்பார் அவர் பேர்தான் !
ஈரமுள்ள நெஞ்சத்தார் - துள்ளும்
வீரமுள்ள கவியுரைப்பார் !
(உட்பகை பற்றிப் பெரியசாமித் தூரன் பாடி முடித்ததும்)

MADRAS RECORD OFFICE BUILDINGS GAZETTEER UNIT FEB 1970

ஓடிற்று உட்பகையும் - இடம்
தேடிற்று நமக்குள்ளே நுழைந்து கொள்ள
வாடிற்று முடியாமல்;
ஆடிற்று அடங்குதற்கே!
கோடிட்டுக் காட்டுகிறேன்.
பாலிட்ட நஞ்சுபோலப்
பக்குவமாய் எட்டிப் பார்க்கும், பின்னர்
ஆலிட்ட விழுதுபோல அங்கங்கே பரவிவிடும்; அதனாலே
தாளிட்டுத் தடுத்திடுவீர் உட்பகையை...
தனிப் பண்பு காத்திடுவீர்...

அடுத்து;
ஒன்றுபட்டால் உண்டுவாழ்வென்ற கொள்கைதனைக்
கொன்று போட்டுக் கொக்கரிப்பார் செயல் மறுக்க
அன்று பார்த்த இளமையுடன் இருக்கின்ற தமிழ் எடுத்துத்
தின்று பார்த்தால் வெல்லமென இனிக்கின்ற
கவிதொடுக்க ஒருவர் உண்டு...
யார் அவர்?
உப்பின்றி அறுசுவையுண்டோ? - கவி
சுப்பின்றி இந்த அரங்குண்டோ!
கொத்தமங்கலத்தார் - ஒற்றுமையின்மையைக்
கொத்திடவே வருகின்றார்...
(ஒற்றுமையின்மை பற்றிக் கொத்தமங்கலம் சுப்பு பாடியதும்)

வேற்றுமையில் ஒற்றுமைதான் வேண்டுமென்று
வெகுகாலம் விளக்கு கின்றோம்
விளங்காதார் துடிக்கின்றார்...
வெடிகுண்டாய் வெடிக்கின்றார்...
விண்முட்டும் கமுகோடு போட்டிபோட
மண்விட்டு எழுந்திருக்கும் தென்னையுண்டு
கண்பட்ட இடமெல்லாம் கேரளத்தில் நேற்று
தென்பட்ட காட்சிதனைச் சொல்லுகின்றேன்; அதுபோல
ஏற்றமிகு நிலையோடு போட்டிபோட்டுத்
தோற்றதில்லை தாழ்வென்னும் நிலைகொண்டார் - சோவியத்தில்!
நாற்றமிகு உயர்வுதாழ்வு நலிந்துபோக
ஆற்றல்மிகு கவிதருவார் அரங்கராசன்
(ஏற்றத்தாழ்வு பற்றி அரங்கராசன் பாடியதும்)

ஏற்றத் தாழ்வெல்லாம் எதற்கென்று குமுறிக்கேட்டு, அந்த
நாற்றங்கால் தனையே தூர்த்துப்போட
வன்முறைதான் ஆகாதென்போம் - அண்ணல் காந்திசொன்ன
நன்முறைதான் வேண்டுமென்போம்.
மென்முறையால் வீடுகாக்கும் சவுந்தரந்தான்
தன்முறை வந்ததென்று அறிந்திடுக, கவிபாட !

(வன்முறை பற்றித் திருமதி சவுந்தரா கைலாசம் அம்மையார் பாடியதும், தலைவர் முடிவுரை)

முடித்துவிட்டீர் கவியரங்கம் அதற்குள்ளே - தேன்
குடித்துவிட்ட வண்டுபோல் சுழல்கின்றேன் ! நீவிர் எழுதியதை மீண்டும்
படித்துவிட்டுப் பரிசளிக்க நான்என்ன கம்பனுக்குப் பொன்
அவிழ்த்துவிட்ட சடையப்ப வள்ளல்தானே ? இல்லை, இல்லை...
இடித்து வைத்த புளிபோல இருப்பார் சிலரசிகர்.
கடித்துவிட்ட செங்கரும்பை விடவாமுடியும் ?
கவியரங்கில் தேனமுதை
வடித்துவைத்த புலவர்களே !
எளியோன் வாழ்த்து ஏற்றிடுக...
எழிற் பொங்கல் திருநாளில்.

வணக்கம்.

ஞானியார் சுவாமிகளும், மணிவாசகரும்

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.)

முன்னுரை :

ஒரு மொழியின் வளர்ச்சியிலும், போக்கிலும் காணப்படும் பல்வேறு இயல்புகளையும், மொழி நூல் அறிஞர்கள் (Philologists) ஆராய்ந்து விளக்குவர். அவற்றுள் '' எழுத்து நிலை மாற்றம் '' என்பதும் ஒன்று.

மக்கள் கவனக் குறைவினாலும், விரைவாகப் பேசுவதனாலும், ஒரு சொல் அல்லது சொற்றொடரில் உள்ள எழுத்துக்களை மாற்றிக் கூறிவிடுவதுண்டு. பின்னர் அச்சொற்களே நாளடைவில் மக்களிடையில் இயல்பாக வழங்கத் தலைப்பட்டு, இலக்கியங்களிலும் இடம் பெற்றுவிடும்.

எடுத்துக் காட்டாக, நம் தமிழ் மொழியில் வைசாகி (விசாக நட்சத்திரத்தை முதன்மையாக உடையது) என்னும் சொல்லே 'வைகாசி' எனவும், மிஞிறு என்னும் சொல்லே 'ஞிமிறு' எனவும், சிவிறி என்பதே 'விசிறி' எனவும், தசை என்பதே 'சதை' எனவும் எழுத்துக்கள் நிலைமாறி வழங்கக் காண்கின்றோம். 'வசி' என்பதே சிவ என மாறிற்று என்று வடமொழியாளர்கள் கூறுவர். Brid என்னும் பழைய சொல்லே Bird என ஆங்கிலத்தில் வழங்குவதாயிற்று. Crul என்பதே Curl எனமாறி வழங்குகின்றது. இவை போன்ற எழுத்து நிலை மாற்றங்கள், ஆங்கிலத்தில் Metathesis எனப்படும்.

மொழி மாற்று :

இங்ஙனம் சொற்கள் மட்டுமே யன்றி, ஒரோவழி சொற்றொடர்களும் தம் நிலை மாறிப் பிறழ்ந்து வழங்குதல் உண்டு.

சுரையாழ அம்மி மிதப்ப, வரையனைய
யானைக்கு நீத்து, முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

என்னும் பழைய செய்யுள் ஒன்றில், 'சுரை மிதப்ப-அம்மி ஆழ' என வருதற்குரிய சொற்றொடர்கள், 'சுரை ஆழ-அம்மி மிதப்ப' என மாறி வந்திருத்தல் காணலாம். இவ்வாறே,

ஆலத்து மேல குவளை, குளத்துள
வாலின் நெடிய குரங்கு

எனவரும் செய்யுளில், '' ஆலமரத்தின் மேல் நீண்ட வாலையுடைய குரங்குகள் உள்ளன; குளத்தில் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன '' என்னும் பொருளில் '' ஆலத்து மேல வாலின் நெடிய குரங்கு; குளத்துள குவளை '' என வருதற் குரிய சொற்றொடர்கள் முறை பிறழ்ந்து வந்திருத்தல் காணலாம். இச்செய்யுட்கள் '' மொழிமாற்றுப் பொருள் கோள் '' முறைக்கு மேற்கோளாக இலக்கண நூல்களில் எடுத்தாளப் பெறும்.

ஸ்பூனரிஸம் :

இங்கிலாந்து தேசத்தில் ரெவரண்ட் டபிள்யூ. ஏ. ஸ்பூனர் (Rev. W.A. Spooner, D.D.) என்னும் பேரறிஞர் ஒருவர், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், புதுக் கல்லூரி

(திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவுளப் பாங்கின்வண்ணம், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயிலில் நடைபெற்ற 'பாவை மாநாட்டு விழா'வில், தஞ்சைத் துணையாளையர் திரு. டி. என். சிங்காரவேலு முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதியைத் தழுவியது (8-1-70).

— ஆசிரியர்)

யின் (New College) விடுதிக் காவலர் (Warden) ஆக இருந்தார். பேரறிவு சான்ற அவர், தமது அறிவாராய்ச்சிகளின் மிகுதிப் பாட்டால், தம்மை மறந்த உணர்வு நிலையில் (Absent-mindedness), சில சமயங்களில் சொற்களை நிலையும் முறையும் மாற்றிக் கூறிவிடுவதுண்டாம்! Dear Queen என்பதனை Queer dean என்றும், Bulging bins என்பதனை Bilging buns என்றும், Crushing blow என்பதனை Blushing crow என்றும் பிறவாறும் அவர் கூறிவிடுவாராம்.

இங்ஙனமே ஒரு சிலர் 'I Say, you stand up' என்பதற்கு மாறாக 'you say, I stand up' என்றும்; 'I propose a hearty vote of thanks' என்பதற்கு மாறாக 'I propose a voty of heart of thanks' என்றும் பிறவாறும் அவசரத்தில் நாக்குத் தவறி மாற்றிக் கூறிவிடுவதுண்டு.

இன்னோரன்ன பிழைபாடுகளைக் குறிப்பதற்கு மொழி நூலறிஞர்கள் ஸ்பூனர் என்னும் அப்பேரறிஞரின் இயல்பினை நினைத்து, 'Spoonerism' எனவே ஒரு குறியீடு அமைத்துவிட்டிருக்கின்றனர். இம்முறையில் நிகழ்ந்த ஒரு சுவையான நிகழ்ச்சியை (Anecdote), இங்குக் குறிப்பிடுதல் நலம் பயக்கும்!

ஞானியார் சுவாமிகள் :

திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளி விளங்கியிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் (1873-1942) அவர்களை அறியாதவர்கள், பொதுவாகத் தமிழ் நாட்டிலும் - சிறப்பாகச் சமய உலகத்திலும் - ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவர்களைச் சுருக்கமாக 'ஞானியார் சுவாமிகள்' என்றே, தமிழ் கூறும் நல்லுலகம் சிறப்புறக் குறிப்பிட்டுப் போற்றி வந்தது - வருகின்றது! அவர்கள் வீர சைவ சமய மரபைச் சார்ந்தவர்களே யாயினும், சைவ வைணவ சமரச நோக்குடையவராகத் திகழ்ந்து, தமிழுக்கும் சமயத்துக்கும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றியிருக்கின்றனர். அவர் ஒப்புயர்வற்ற பெருநாவலர். அவர்தம் நிகரற்ற நாவன்மை, கிறித்தவ இசுலாமிய சமயப் பெருமக்களையுங் கூட, இணையற்ற இனிய தமது சமயச் சொற்பொழிவுகளில் ஈர்த்து ஈடுபடச் செய்விக்கும்.

சிவத்திரு. ஞானியார் சுவாமிகள் நம் தமிழ் நாடு செய்த தவப்பயனாக வந்துதித்தவர்கள். அவர்களை நினைக்குங்காலெல்லாம், "ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை" எனப் போதரும் சேக்கிழார் பெருமானின் திருப்பாடல் நினைவிற் போந்து இன்புறுத்துகின்றது. சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிவஞான முனிவரர் ஆகிய பலரும் ஒருருவாய்த் திரண்ட பேருருவே, ஞானியார் சுவாமிகளின் திருவுருவம் எனக்கூறி இறும்பூது எய்தலாம்படி, அவர்களின் பெருமாட்சிமை இணையற்றுப் பிறங்கியது.

சிவிகை இவர்ந்து, தென்னாடெங்கணும் திருவுலா எழுந்தருளிச் செந்தமிழ் பரப்பிய செயலால், சுவாமிகள் திருஞான சம்பந்தப் பெருமான் எனும்படி திகழ்ந்தனர். சிந்தை இடையறு அன்பும் திருமேனி தன்னில் அசைவும் கொண்டு, "மொய்த்துவளர் பேரழகு மூத்த வடிவேயோ? அத்தகைய மூப்பெனும் அதன் படிவமேயோ?" என வியக்கும் வண்ணம், சிவவேடப் பொலிவழகு சிறந்து சிவநெறி வளர்த்த செயலால் திருநாவுக்கரசர் போன்று விளங்கினர். உலகியலுணர்வின் உயர்வாற் சுந்தர மூர்த்திகள் போலவும், கனிவும் கசிவும் மிக்க மனநிலையின் மாட்சிமையால் மாணிக்கவாசகர் போலவும், மக்களிடையிற் பக்திச் சுவையும் நெறியும் பரப்பிய பான்மையாற் சேக்கிழார் போலவும், ஞானியார் சுவாமிகள் நலமுறப் பொலிந்தனர்.

சுவாமிகளின் சொற்பொழிவுகள் கடல்மடை திறந்தாற்போலவும், திருக்குற்றாலத்து அருவிப் பெருக்கம் போலவும் தங்கு தடையின்றி, வெண்கல ஒலியுடன் 'கணீர்' என்று, செஞ்சொற்களான் இயன்று, இன்னோசை அமைந்து, பயனில் சொற்கள் சிறிதும் விரவாமல், நயனொளிரும் கருத்துக்கள் செறிந்து, பொருள் நலங்கள் பொதுளிப் புலமை நலம் பொருந்தித் தொடக்கமுதல் முடிவு வரையிற் சுவை நிரம்பித் துளும்பா நிற்கும். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற திருக்குறளுக்குச் சிறந்த இலக்கியமாக விளங்கியது, ஞானியார் சுவாமிகளின்

சொற்பொழிவே யாகும். "நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின் உரை மூதாளன்" என மணிமேகலையின் வரிகளில் அறவணவடிகள் போற்றப்பெறுதல்போல, நமது ஞானியார் அடிகளார் தமது முதுமை நிலையிலும் நடுங்கா நாவின் உரை மூதாளராகத் திகழ்ந்து, தேன்தரு மாரிபோன்று செஞ்சொல் விரிவுரைகள் செய்து போந்தனர்.

அவ்விரிவுரைகள் "உடல்குளிர உயிர் தழைக்க உணர்ச்சி ஓங்க உளங்கனிய மெய்யன்பர் உள்ளத்தூடே கடல் அனைய பேரின்பம் துளும்பச் செய்யும்". அடிகளார் வடமொழி தென்மொழி தெலுங்கு கன்னடம் ஆங்கிலம் என்னும் பல மொழிகளைப் பல ஆண்டுகள் முயன்று பயின்று தேர்ந்த "பல்கலைக் குரிசில்" ஆதலின், இந்நாளைய சொற்பொழிவுகளிற் போல் அன்றி, வற்றுது பொங்கிப் பெருகும் தங்குதடையற்ற கருத்துச் செறிவும் வளப்பமும் மாட்சிமையும் அடிகளார் சொற்பொழிவுகளிற் காணப்படும்.

சுவாமிகள் தமது சொற்பொழிவுகளின் இடையிடையே உலகியற் பழமொழிகளின் செம்பொருளை விளக்குவார்கள்; சாத்திரங்களின் நுணுக்கங்களையும் மரபுகளையும் தெளிவிப்பார்கள்; இனிமை பொருந்திய இயற்கையான இரு பொருட்குறிப்பு மொழிகளை இடம்பொருள் என்பவற்றிற் கேற்பப்பேசி மகிழ்விப்பார்கள்; தூய்மை மிக்கு உயரிய பெருந்தகைமை சான்ற நகைச் சுவையினை விளைவிப்பார்கள்; அரிய நுண்ணிய கருத்துக்களை எளிய இனிய முறையில் தெளிவித்தல் குறித்துச் சிறிய சிறிய கற்பனைக் கதைகளையும் கூறுவார்கள்; வேதாகம உபநிடதங்களிலிருந்தும், சங்க இலக்கியங்கள் திருமுறைகள் சித்தாந்தசாத்திரங்கள் தனிப் பாடல்கள் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் ஆகியவற்றில் இருந்தும், சீரிய மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக்காட்டுவார்கள். புராண கதைகளின் நுண் பொருள்களைப் புலங்கொளத் தெருட்டுவார்கள். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்பதற் கேற்பச் சுவாமிகளின் பேச்சில் ஈடும் எடுப்பும் அற்ற பேராற்றலும் பேரொளியும் பிறங்கித் திகழ்ந்தன. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மட்டுமே யன்றி, அடிகளார் உலகியல் அறிவிலும் தலைசிறந்து கைவந்து தேர்ந்து இலங்கினர்.

காலமும் இடனும் வாலிதின் நோக்கி, எவர் மனமும் புண்படாமல், எச் சமயத் தினையும் இகழாமல், எடுத்துக்கொண்ட பொருளுக்குப் புறம் போகாமல், அவையறிந்து பேசும் உலகியல் உணர்வில் ஒப்புயர்வற்ற பெருந்தகைமை மிக்கவர் நமது சுவாமிகள்!

கல்விக் கடலாய், குண மலையாய், செந்தமிழ்த் திங்களாய், சிவநெறிச் செஞ்ஞாயிறாய், இன்சொல் மணக்கும் தென்றலாய், அறிவுநலங் கொழிக்கும் பேரருவியாய், நகைமுகிழ்த்து அருட்டேன் சொரியும் நறுமலராய், சார்ந்தார்க்கு நலம்புரியும் தண்பொழிலாய் வாழ்ந்து வயங்கி யொளிர்ந்த சுவாமிகளின் அருமை பெருமைகளை, எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ? அவை விரிப்பின் அகன்றும், தொகுப்பின் எஞ்சியும் செல்லும் சிறப்பினவாகும்.

திருவாசகப் பாடல் :

அவர்கள் ஒரு சமயம் ஒரு பேரவைக்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். இடையில் அங்கிருந்த ஓதுவாமூர்த்திகள் ஒருவரை ஒரு பாடல் இசைக்குமாறு பணித்தார்கள். ஓதுவா மூர்த்திகள்,

> தந்ததுன் றன்னைக் கொண்டதுன் றன்னைச்
> சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
> அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்.
> யாதுநீ பெற்றதொன் றென்பால்?
> சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
> திருப்பெருந் துறையுறை சிவனே!
> எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்!
> யான்இதற் கிலன் ஓர்கைம் மாறே!

என ஒரு திருவாசகப் பாடலை இனிமையாகப் பாடினர். யாவரும் அவர் பாடிய இசையினிமையில் ஈடுபட்டு மிகவும் மகிழ்ந்தனர். அப்பாடலில் அவர் ஒரு சிறு தவறு அமையப் பாடினர் என்பதை ஒருவரும் உணர்ந்து கொள்ளவில்லை. ஓதுவாமூர்த்திகள் மிகச் சிறந்த ஒரு திருவாசகப் பாடலைச் சமயோசி

தமாக எடுத்து அருமையாகப் பாடினர் என்றே அனைவரும் வியந்து இன்புற்றனர்.

நயத்தக்க நாகரிகம் :

ஆனல் ஞானியார் சுவாமிகள் ஒருவர் மட்டும், ஓதுவாமூர்த்திகள் அப்பாடலின் பொருள் அருமையினை ஆழ்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு இன்றி, ஏதோ தாம் ஊன்றிக் கவனியாமல் இளமையில் மனப் பாடம் செய்துவிட்ட முறையில், பிழைபடப் பாடுதலைக் கவனித்துவிட்டார்கள். ஆயினும் அவர் அதனை வெளியிற் காட்டிக்கொள்ள வில்லை.

> **எனைத்தும் குறுகுதல் ஓம்பல், மனைக்கெழீஇ**
> **மன்றிற் பழிப்பார் தொடர்பு**

எனத் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலின், அவ்வளவு பெரிய மக்கள் மன்றத்தில், அவருடைய பிழையினை எடுத்துக்காட்டித் திருத்துதற்குச் சுவாமிகள் முற்பட்டிலர்! உலகியலுணர்வாம் இங்கிதம் நன்கு மிகக் கைவந்து தேர்ந்த பரம கருணாமூர்த்தியல்லரோ நமது ஞானியார் சுவாமிகள்?

ஒரு சில அறிஞர்கள் பிறருடைய பிழைகளை எடுத்துக் காட்டுதலிலேயே, தமக்குத் தனிப்பெரும் சிறப்பு இருப்பதாகத் தவருகக் கருதிக்கொண்டு, இல்லாத பிழை களையும் இருப்பன போலக் கற்பனை செய்து பொல்லாத முறையில் எடுத்துக்காட்டி, ஏனையர் பிறரையெல்லாம் இகழ்ந்து பழித்து இழித்துக்கொண்டே காலம் கழிப்பர். ஆனல் ஞானியார் சுவாமிகளோ, பிறர்செய்யும் பிழைகளை மறைத்துப் பிழையில்லன போலக் காட்டித் திருத்திக் காத்தருளும் பெருந் தகைமை மிக்கவர்கள்!

> **" நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து**
> **வல்லா ராயினும் புறம்மறைத்துச், சென்றோரைச்**
> **சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி**
> **நல்லிதின் இயக்கும் "**
>
> — *மலைபடுகடாம் (77-80)*

" நயத்தக்க நாகரிகப் பண்புநலம்" அவர் கள்பால் இயல்பாக அமைந்திருந்தது. எனவே பிறர் உணரா வகையிலும், ஓதுவா மூர்த்தி களின் உள்ளம் நோகாமலும், தம் கடமையில் தவருமலும், ஏற்றபெற்றியிற் பின் வருமாறு பேசி அவரை இனிது திருத்தியருளினர்.

மலையும் மடுவும் :

சுவாமிகள் தமது சொற்பொழிவின் இடை யில் தமிழ் மொழியின் அருமையினையும், திரு முறைகளின் பெருமையினையும், சிவநெறிச் சான்றோர்களின் சிறப்பினையும் விளக்கிக் கொண்டு செல்லுபவர் போல, இயல்பான போக்கில்,

> **தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்**
> **சங்கரா! ஆர்கொலோ சதுரர்?**

எனவரும் திருவாசகப் பாடலை ஓதுவா மூர்த்தி கள் மிக இனிமையாகவும் உருக்கமாகவும் பாடி னர்கள். இவர்கள் பாடிய இதனையே ஒரு சிலர்,

> **தந்ததென் றன்னைக் கொண்டதுன் றன்னைச்**
> **சங்கரா! ஆர்கொலோ சதுரர்?**

எனத் தம் 'சதுரப்பாடு' தோன்றப் பாடி விடு வதுண்டு. மேல்நோக்காகப் பார்ப்பவர்களுக்கு வேறுபாடு எதுவுமே தெரியாது. மிகவும் உற் றுக் கவனித்தால்தான், இரண்டிற்கும் இடை யேயுள்ள வேறுபாடும் எழுத்துநிலை மாற்றமும், விளங்கும். 'உ' 'எ' என்னும் இரண்டு எழுத் துக்கள் இங்குத் தம் நிலை மாறிவிடுமாயின், பொருள் மருளாக - அர்த்தம் அனர்த்தமாக- முடிந்தொழியும்.

> **" தந்தது (உ)ன் றன்னைக்**
> **கொண்டது (எ)ன் றன்னை "**

என்பதற்கும்,

> **" தந்தது (எ)ன் றன்னைக்**
> **கொண்டது (உ)ன் றன்னை "**

என்பதற்கும் இடையே, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுண்டு. இவ்விரண்டில் முன்னை யதே சரியான பாடம். பின்னது பிழைபாடு உடையது.

பொருள் வேறுபாடு :

முன்னையதின்படி, தருதலும் கொள்ளு தலும் ஆகிய இரு செயல்களுமே இறைவன் செய்தவையாகும். பின்னையதின்படி, தந்த தும் கொண்டதும் ஆகிய இருசெயல்களும்

மாணிக்கவாசகரே செய்தனவாக முடியும், உகர எகரங்கள் ஆகிய எழுத்துக்களின் நிலை மாற்றத்தால், இப்பொருள் மாற்றமும் ஏற்படுகின்றது. தமிழ் ''உயர்தனிச் செம்மொழி'' யாதலின், அதன் ஒவ்வோர் எழுத்தும் அமைப்பும் நுண் பொருள் உடையதாகும். எனவே, தமிழ்ப் பாடல்களிலுள்ள ஒரு சிறு எழுத்தைத் தானும், நாம் நம் விருப்பம் போலெல்லாம் மாற்றுதல் கூடாது. தமிழ்ப் பாடல்களை நாம் எழுத்துப் பிழையறக் கற்றல் வேண்டும்.

''ஒருபிழைக்கா அரனார்முன்
உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணம் என்று
அறைவதும் அற்புதமாமே''

எனப் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துச் செய்யுளின் பகுதியை, ஈண்டு நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

'' தந்தது (உ)ன் தன்னை...'' என்றால், ''நீ உன்னை எனக்குத் தந்தாய்; நீ என்னை ஏற்றுக் கொண்டாய்'' எனப் பொருள்தரும்.

''தந்தது (எ)ன் தன்னை...'' என்றால், ''யான் என்னை உனக்குத் தந்தேன்; யான் உன்னை எனக்கு எடுத்துக்கொண்டேன்'' எனப் பொருள் படும்.

எல்லாம் இறைசெயல் :

நமது திருமுறையாசிரியர்கள் பசுகரணங்கள் நீங்கிப் பதிகரணங்களைப் பெற்றுச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு எய்தியவர்கள். சிவஞான முதிர்ச்சியில் தலை சிறந்து விளங்கியவர்கள். எனவே, அப்பெருமக்கள் தமக்கென ஒரு செயலும் உடையவர் அல்லர்! ''எல்லாம் சிவன் செயல்'' என்று உணரப் பெற்றவர்களாதலின், அவர்கள் எதனையும் ''நான் செய்தேன்'' என்று எண்ணுவதில்லை. 'நான் செய்தேன்' 'பிறர் செய்தார்' 'எனது' 'யான்' என்னும் இக் கோணை, ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத் தாம் செவ்வே நிற்பவர்கள்தாம், சிவஞானிகள் ஆவர். அத்தகையோர்க்கே இறைவன் நேரே தனையளித்து நிற்பன், வினை ஒளித்திட்டோடும்.

''நான்செய்தேன் எனும் அவர்க்குத்
தான் அங்கு இன்றி
நண்ணுவிக்கும் போகத்தைப்
பண்ணுவிக்கும் கன்மம்''.

— சித்தியார் 305.

'' நம் செயல் ஒன்றும் இல்லை. எல்லாம் இறை செயல்'' என்னும் உணர்வு வரப்பெற்றால்தான், நாம் ஞானநிலை எய்தப் பெறுவோம். அப்போதுதான் இறைவன் தன்னை நமக்குத் தந்து நம்மில் அவன் உறையத் தலைப்படுகின்றான்.

'' நம்செயல் அற்றிந்த நாம்அற்ற பின், நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தான்என் றுந்தீபற''

— திருவுந்தியார்.

செயல் மாண்ட சிறப்பு :

மாணிக்கவாசகர் ஞானப் பெருந்தலைவர். அவர் தம்முடைய செயலையெலாம் இழந்து, எல்லாம் சிவன் செயலேயாகத் தெளிந்து கைவந்தவர். முன்பெல்லாம் உலகியல் நிலையில் இருந்தபோது, அவரும்கூட 'நான் இதனைச் செய்தேன்' 'அதனைச் செய்தேன்' என்று எண்ணியிருந்தாராம். ஆனால் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகு, அவருக்கு 'என்னுடைய செயல் இது' என்ற உணர்வு அறவே மாண்டு அகன்றொழிந்து விட்டதாம். மணிவாசகர் பெற்ற சிவஞான முதிர்ச்சியின் சிறப்பினை விளக்கும் செய்தி இது! இச்செய்தியினை அவரே பின்வருமாறு பாடியருள்கின்றார்!

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு, அருவினைச் சுற்றமும்
மாண்டு, அவனியின்மேல்
மயல்மாண்டு, மற்றுள்ள வாசகம்
மாண்டு, என்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

— திருவாசகம்.

அஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் :

'' இறைவன் என்னைக் கலந்து ஆண்டு கொண்ட உடனே, என்னுடைய செயல் மாண

டது' என்று பாடியருளும் மாணிக்கவாசகர், இறைவன் தன்னைத் தமக்குத் தந்ததும், தம்மை இறைவன் தன்பால் ஏற்றுக் கொண்டதும் ஆகிய இரு செயல்களுமே, இறைவனுற் செய்யப் பெற்றவை என்னும் கருத்தில்,

" தந்தது (உ)ன் றன்னைக்
கொண்டது (எ)ன் றன்னை "

எனப் பாடியிருப்பரே யன்றி, தந்ததும் கொண்டதும் ஆகிய இரு செயல்களும் தாம் செய்தன வாகப் பொருள்படும்படி,

" தந்தது (எ)ன் றன்னை
கொண்டது (உ)ன் றன்னை "

எனப் பாடியிருத்தல் இயலாது. அங்ஙனம் பாடியிருந்திருப்பின், அஃது அஞ்ஞான நிலையைக் காட்டுவதாகுமேயன்றி, மெய்ஞ்ஞான நிலையினை உணர்த்துவதாகாது.

அதிகாரம் இல்லை :

'உ' 'எ' என்னும் இரண்டு சிறு எழுத்துக்களின் நிலை மாற்றத்தால், எத்தகைய விபரீதப் பொருள் நேர்ந்து விடுகின்றது என்பதனை, மெய்யன்பர்கள் கருத்தில் இருத்துதல் வேண்டும். திருமுறைப்பாடல்கள் போன்ற தெய்விக நூல்களில், ஓர் எழுத்தைக் கூட்டவோ குறைக்கவோ மாற்றவோ நமக்கு அதிகாரம் இல்லை.

" ஆயக் கடவேன் நானேதான் ?
என்னதோ இங்கு அதிகாரம் "

என மாணிக்கவாசகர் பாடியிருத்தல் காணலாம். எனவே திருமுறைகளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எழுத்தையும்கூட, நாம் செவ்விதின் ஊன்றிக் கவனித்து உணர்ந்து ஓதுதல் வேண்டும்... என்னும் கருத்துப்படச் சிவத்திரு ஞானியார் சுவாமிகள் தம் சொற்பொழிவின்கண் செவ்விதின் அறிவுத்தி யருளினர். அவையினர் அனைவரும் அளவிலாப் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

முடிவுரை :

இச்சுவைமிகு செய்தி, தெய்விகப் பனுவல்களை ஓதியுய்ய விரும்பும் நம்மனோர் உள்ளத்தில் என்றும் நின்று நிலைபெறுதற் குரியதாகும்.

" தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விரித்துச் சுவைமிக் கோங்கும்
நகையோடு, பொருள்செறிந்த நல்லுவமை
நன்மேற்கோள் நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு, சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திகையாவும் சிவம்பரப்பும் திருப்புலிசை
ஞானியர்தாள் சிந்தை செய்வாம்,

— ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

சென்னை பரங்கிமலைக்கு அருகில் உள்ள நங்கைநல்லூர்ச் செல்வவிநாயகர் கோயிலில், கணேஷ்மண்டலி—குருவாயூர் அப்பன் ஆத்திக சமாஜம் ஆகியவற்றின் சார்பில், பாவை விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. டி. எஸ். இராசகோபால ஐயங்கார், B. A., L. T., 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L., மயிலை விவேகானந்தா கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு. சகந்நாதாச்சாரியார், M. O. L., நாவல்பாக்கம் உப. வே. வரதாச்சாரிய சுவாமிகள் ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர். காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆசியுரை அனுப்பியருளியிருந்தார்கள். 150க்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் பரிசுகளும் அம்பாள் வெள்ளிக்காசுகளும் வழங்கப்பெற்றன. திரு. எம். பி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் நன்றியுரை நவின்றார். திரளான ஆண்களும் பெண்களும் வந்து சிறப்பித்தனர். (25-1-79)

—ஆசிரியர்.

அறிவியலும் இறையியலும்

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

இந்தக் காலம் 'அறிவியற் காலம்'. இந்த இருபதாம் நூற்றாண்டு அறிவியல் நூற்றாண்டு எனப் பெரிதும் போற்றப்படுகிறது. இந்நாளில் எல்லாத் துறைகளிலும், அறிவியலானது பெரிதும் பரவி ஊடுருவி வருகின்றது. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர் கூறுமாறுபோல, ''அண்மையில் நூற்றைம்பது ஆண்டுகளின் காலத்துக்கு உட்பட்ட அறிவியல் வளர்ச்சியானது, தனக்கு முற்பட்ட ஐயாயிரம் ஆண்டுகளின் காலத்துச்குரிய பண்பாட்டைத் தகர்த்தெறிய வல்லதாக இன்று வளர்ந்து விளங்கி வருகின்றது'' (Scientific Outlook, p.9).

இந்நாளில் அறிவியல் அல்லது விஞ்ஞானம் என்பது, மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. அறிவியலின் கிளைகளும் கூறுகளும் மிகப் பலவாக நாடோறும் விரிந்து பெருகி வருகின்றன. 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்பது, ஒருவகையிற் பழையதொரு வழக்கிழந்த கூற்றாக மாறிவிட்டது. நாளுக்கு நாள் அறிவியற் கலைக்கூறுகள், அளவிறந்தனவாக வளர்ந்து விரிந்துகொண்டே செல்கின்றன. சிறிய சிறிய பொருள்களையும் பற்றி, நிரம்ப நிரம்பத் தெரிந்து கொண்டிருப்பவனே 'அறிவியலிற் சிறப்பறிஞன்' எனப்படுகின்றான். பேராசிரியர் வில்ட்யூரண்ட் (Prof. Will Durant) என்னும் பேரறிஞர், தாம் எழுதிய 'தத்துவத்தின் கதை' (The Story of Philosophy) என்னும் நூலின் முன்னுரையில், பின்வருமாறு எழுதுகின்றார்.

அறிவியலின் வளர்ச்சி ;

''மனித அறிவானது, சமாளிக்க முடியாத நிலையில் விரிவாகி விட்டது. ஒவ்வோர் அறிவியலும், மேலும் பன்னிரண்டைப் பயந்து விட்டுள்ளது; ஒன்று மற்றொன்றைவிட மிக நுண்ணிதாகவும் உள்ளது. தொலைநோக்காடியானது (Telescope) வானத்தில் உள்ள விண்மீன்களையும், அவற்றின் இயக்கங்களையும் பற்றி, மனித மூளைக்கு எட்டாத பல செய்திகளை வெளிப்படுத்தியிருக்கின்றது. நிலநூல் (Geology), இதற்கு முன்பெல்லாம் ஆயிரம் என்ற அளவில் பேசப்பெற்று வந்தனவற்றை, நூறுநூறாயிரம் என்று பேசும்படி செய்து விட்டது. பௌதிகநூல் (Physics), மிகச்சிறிய பரமாணுவில் மிகப்பெரியதொரு பேரண்டத்தையே கண்டுவிட்டிருக்கின்றது. உயிர்நூல் (Biology), உடலின் ஒரு சிறு நுண்ணறையில் (Cell), ஒரு சிறிய உலகையே கண்டு பிடித்து ஆராய்கின்றது. உடலியல்நூல் (Physiology), ஒவ்வோர் உறுப்பிலும் எல்லையற்ற மறைபொருள் நுட்பத்தினை ஆராய்ந்திருக்கின்றது. மனநூல் (Psychology), ஒவ்வொரு கனவிலும் விந்தையான நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது. மனிதநூல் (Anthropology), ஐயத்திற்கு இடனின்றி மனிதனின் பழமையைப் புதிதாக வலியுறுத்துகின்றது. தொல்பொருள் நூல் (Archaeology), புதைந்த

நகரங்களையும், மறைந்த அரசுகளையும் அகழ்ந்தெடுக்கின்றது. வரலாற்றுநூல் (History), எல்லா வரலாறுகளையும் பொய் என்று நிறுவுகின்றது. இறைநூல் (Theology), சரிகின்றது. அரசியற் கொள்கைகள் பற்பல சிதைகின்றன. புதிய கண்டுபிடிப்புக்கள் (Inventions), வாழ்க்கையையும் போரினையும் சிக்கலாக்குகின்றன. பொருளியற் கொள்கைகள், ஆட்சிகளைக் கவிழ்த்து, உலகத்தையே நிலைகலங்கச் செய்கின்றன !

முன்பெல்லாம் ஏனைய கலைகளைத் துணையாக அழைத்துப் பணிகொண்டு வந்திருந்த தத்துவநூல் (Philosophy), அவற்றை இணைத்துவைத்து இயக்கிவந்த தனது துணிவை இழந்து, உண்மை என்னும் போர் முனைகளினின்று தப்பி ஓடி ஒளிந்து, புரியாத குறுகிய சந்துகளிற் புகுந்து நுழைந்து கொண்டு, வாழ்க்கையின் சிக்கல்களுக்கும் பொறுப்புகளுக்கும் அஞ்சி நடுநடுங்கிப் பாதுகாப்பாக இருந்துவர முயல்கின்றது. இங்ஙனம் இன்று மனித அறிவானது, மனித மூளை தாங்க முடியாமல் திணறித் தடுமாறும் அளவுக்குப் பெருகி வளர்ந்திருக்கின்றது''.

அறிவியலும் இறையியலும் :

இவற்றினாலெல்லாம், அறிவியலுக்கும் இறையியலுக்கும் ஏதோ முரண்பாடு இருப்பது போல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. அறிவியல் வளர வளர, இறையியலும் இறையியல் நம்பிக்கைகளும் தாமே மறைந்து விடும் என்றும், ஒரு சிலர் வலியுறுத்திக் கூறுவர். இறையுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள், குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு, ஒரு சிலர் ஏளனமும் செய்யா நிற்பர். மற்றும் சிலர், தமக்கு இறையுணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, ஒருவகை முற்போக்கு நெறியாகவும், நாகரிகப் பாங்காகவும் கடைப் பிடித்தொழுகுதலையும், நாம் காண்கின்றோம்.

ஆனால் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், அறிவியலுக்கும் இறையியலுக்கும் எத்தகைய இகலும் முரண்பாடும் இருப்பதாகச் சூறிதும் தோன்றவில்லை. அறிவியலும் இறையியலும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. அறிவியல், ஐம்புலன்களுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும், பருப்பொருள்களையும் (Phenomena) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது. இறையியலோ ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண்பொருள்களையும் (Noumena) ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழிவகுக்கின்றது. இவ்வாற்றால் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல் முறைகளும், தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின் இவை இரண்டிற்கும் இடையே, எத்தகைய போட்டியும் பூசலும் ஏற்பட வாய்ப்பே இல்லை.

'எங்கே அறிவியல் செயலிழந்து முடிவுற்று நிற்கின்றதோ, அங்கேயிருந்துதான் இறையியல் தொடங்குகின்றது'(1). அறிவியல் என்பது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே; அஃது இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றது. அதன் வளர்ச்சி முறையிலும், ஆராய்ச்சி நெறியிலும், எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் நேரலாம். ஆதலின், அறிவியல் இறையியலுக்கு முரண்பட்டதென்று நாம் முடிவு கட்டிவிடுதல், பொருத்தம் ஆகாது. மேலும், அறிவியல் என்பது இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கக் கூடுமேயன்றி, அதன் காரணங்களையும் அடிப்படைகளையும், விளக்கவல்லதன்று(2). அறிவியல் எனப்படுவது வெறும் அறிவே; ஆனால் இறையியல் ஆகிய சமயமோ, அதன் பயனாகிய சிறந்த அநுபவமாக அமைவது. எனவே, அறிவியலும் இறையியலும் தம்முள் ஒன்றையொன்று தழுவிப்

---

(1) "Where Science ends, there religion begins".

(2) "Science cannot tell the ultimate "why" of things and events. Hydrogen and Oxygen combine to form water, but why should they? We all know Newton's Law of inverse squares. Science does not tell us why it cannot be the Law of inverse cubes. Natural laws are what they are, but why they are not something else, science does not sa y"

—W. C. Dampier Whetham.

பிணைந்து நிறைவுறுவனவேயன்றி, முரண் படுவன அல்ல என்று உணரலாம்.(3)

ஐன்ஸ்டைன் :

"இறையியல் கலவாத அறிவியல் முடத் தன்மையுடையது; அறிவியல் கலவாத இறையியல் குருட்டுத்தன்மை வாய்ந்தது"(4) என்பர் பேரறிஞர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன். "இறையியலோடு இயைபில்லாத அறிவியல் அகந்தை மிக்கது; அறிவியல் சேராத இறையியல் மூடநம்பிக்கை பொருந்தியது"(5) என்பர் பேரறிஞர் இராதாகிருட்டினன். "வெறும் அரைகுறை அறிவே இறையுண் மையை மறுத்துப் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமயவுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்"(6) எனச் சாற்றுவர் பிரான்சிஸ் பேக்கன் !

'அறிவியற்றுறை அறிஞன் என்பவன், நாத்திகனாக இருத்தல் இயலாது. இயற்கைப் பொருள்களை ஆராய ஆராய, இறைவனின் அருமை பெருமைகள் அறிவியல் அறிஞனுக் குத்தான் நன்கினிது விளங்கும்' என்பது, அறிவியற் பேரறிஞர்களுள் தலைசிறந்தவர் ஆகிய ஆல்பெர்ட் ஐன்ஸ்டைனின் கூற்று. முதலிற் கடவுளுணர்ச்சி இல்லாமல் இருந்த விஞ்ஞானிகளிற் பலர், பின்னர் நாளடைவில் கடவுளுணர்ச்சி யுடையவர்களாக மாறியிருக் கின்றனர்.

ரெனிஃபுலாப் மில்லர் :

அறிவியற்றுறையின் போக்கு, இப்பொழு தெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணையவே முற்பட்டு வருகின் றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர் என்னும் அறிஞர், பின்வருமாறு உருவகமுறையில் அழகுற விளக்குகின்றார்:

"அறிவுக்கும் (Reason), நம்பிக் கைக்கும் (Faith), —அறிவியலுக்கும் இறையியலுக்கும்—இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவு நலனும் பரந்த மனப் பான்மையும் கொண்ட, ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய ஒரு நடுவுநிலைக் குழுவினர், அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன். ஜீன்ஸ், வொயிட்ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்றுரை கூறினர். அச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதிவாதியாகிய நம்பிக்கை யின்மீது கொணரப் பெற்ற வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனால் வாதியாகிய அறிவுதான், 'புரட்சிகரமான பிற்போக்கு மனப் பான்மை கொண்டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐயுறவு நேர்ந்தது. ஆயினும் தன் குற்றத்தை யுணர்ந்து கொண்டு, மெய்யாகவே திருந்திவிடக் கூடிய நிலையில் மாறி வருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின் மீது, அக்குற் றம் வலியுறுத்தப்படாமல், பரிவு காட்டப்

---

(3) "Increasing number of important physicists, astrophysicists, mathematicians, and biologists are now of the opinion that science and religion are not only not at all inimical to each other, but constitute only in their intimate inter-relation a complete picture of the world".

—Rene Fulop Miller·

(4) "Religion without science is lame, science without religion is blind".

—Dr. Albert Einstein.

(5) Religion without science is superstition, science without religion is arrogance".

—Dr. S. Radhakrishnan.

(6) "I had rather believe all the fables in the Legends and the Talmud and the Alcoran than that this Universal frame is without a Mind. It is true that a little philosophy inclineth a man's mind to atheism, but depth in philosophy bringeth men's minds about to religion".

—Francis Bacon.

பெறுகின்றது''(7). என அவர் 'அகிலத்தை அசைவித்த அருளாளர்கள்' என்னும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். இஃது எதனைக் காட்டுகின்றது?

மில்லிகன் :

''அறிவியல் அறிஞர்களிற் பலர், இன்று இறையுணர்வும் நம்பிக்கையும் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். அறிவியல், உலகாயத நிலையில் இருப்பதாக இன்றும் சிலர் பேசி வருதல் பொருந்தாது. இந்நாளைய விஞ்ஞானி கள், மெய்ஞ்ஞானிகளோடு சேர்ந்து, இறைவனை இயற்கையின் மூலம் உணர்ந்து துதித்துப் பரவி வழிபடத் தலைப்பட் டுள்ளனர்''(3) என்று மில்லிக்கன் என்னும் அறிவியலறிஞர் இயம்புகின்றார்.

மார்க்கோனி :

அறிவியற் பேரறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவர், தாம் காலை மாலை வேளைகளில் செய்யும் செபமும் பிரார்த் தனையும், எங்கேயோ பரமண்டலத்திலுள்ள பரமபிதாவுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும்? என்று தமக்குச் சிறுவயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடிக்க முடிந்ததன் வாயிலாகத் தீர்ந்துவிட்டது என்றும்; அன்பர்கள் செய்யும் வேண்டுகோள் களை யெல்லாம், உலகம் எங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் செவிமடுத்து மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பது முற்றிலும் உண்மையே என்றும், குறிப்பிட் டிருக்கின்றார்.

பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் :

உலகப் புகழ்பெற்ற தத்துவ - கணிதப் பேரறிஞர் ஆகிய பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் என்பவர், 'சமுதாயத்தின் மீது விஞ்ஞானத்தின் விளைவு' என்னும் நூலிற் கூறியிருப்பது ஈண்டுக் கருதியுணர்ந்து மகிழற்பாலது.

''இக் காலநிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன. நம் காலநிலையில் அருளு ணர்வும், மனித இனம் இன்பமாக வாழ வேண்டும் என்னும் விருப்பமும் தேவைப் படுகின்றன. எல்லாவற்றினும் மேலாகத் திடமான நம்பிக்கையும், புதியன படைத் தலில் ஆர்வமும், இக்காலத்திற்கு இன்றி யமையாதன வாகும்.

நான் கூறப்புகும் செய்தியின் அடிப் படை அல்லது வேர் யாது எனின், மிக எளிமையானதும், மிகப் பழமை முறையில் அமைந்ததுமான ஒன்றேயாம். நான் கூற முற்படுவது மிகமிக எளிமையும், மிக்க பழமைமுறை வாய்ந்ததாகவும் பற்றி, ஒரு சிலர் என்பால் புன்முறுவல் பூத்து ஏளனம் செய்யக் கூடுமே என்று அஞ்சி, அதனைக்

---

(7) "At the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason. More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for defense, and materialism is told many unpleasant things by its own experts and authorities.

The Jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses Millikan, Eddington, Jeans, Whitehead, Haldane. The case against faith is dismissed.

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness, but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways".

—Rene Fulop Miller,
The Saints that Moved the World.

(8) "Is there anyone who still talks about the materialism of science? Rather does the scientist join with the psalmist of thousands of years ago in reverently proclaiming, 'the Heavens declare the glory of God and Firmament showeth His handiwork''.

—Robert Andrews Millikan.

குறிப்பிடுவதற்குக் கூட, நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன்.

நான் கருதும் பொருள் - அதனைக் குறிப்பிடுவதற்காக, அருள்கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள் - அன்பு, 'இறையியல் அன்பு' அல்லது சமய வுணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும்.

இத்தகைய உணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள். ஆவீர்கள்.''(9) இவ்வாறு,

சமயநெறி வெறுப்பாளராக ஒரு காலத்தில் இருந்த, பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறுவது, அறிவியல் அறிஞர்களிற் பலர் இந்நாளில், இறையுணர்வும் நம்பிக்கையும், வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று உணர்ந்துகொண்டு மாறிவருகின்றனர் என்பதற்கு, இனிய நல்ல சான்றாகும்.

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த சிலவற்றால், உண்மைச் சமயமும் விஞ்ஞானமும் - அறிவியலும் இறையியலும் - தமக்குள் ஒருபோதும் இகலி மாறுபடுவன அல்ல என்னும் செய்தி, அனைவர்க்கும் இனிது புலனாகும். ஆதலின், நாம் அனைவரும் அறிவியலையும் இறையியலையும் நன்கினிது தக்கவாறு போற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நலம்பல பெற்றுய்ய முயலுவோமாக!

— ஆசிரியர்.

---

(9) "There are certain things that our age needs and certain things that it should avoid. It needs compassion, and a wish that mankind should be happy. It needs, above all, courageous hope and the impulse to creativeness.

The root of the matter is a very simple and old fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of derisive smile with which wise cynics will greet my words. The thing I mean—please forgive me for mentioning it—is love, Christian love, or compassion.

If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an imperative necessity for intellectual activity".

—Dr. Bertrand Russel,
Impact of Science on Society, p. 114.

மதிப்புரை :

காவை முருகன் பிள்ளைத்தமிழ்: இந்நூல் திருவானைக்காவில் உள்ள முருகப் பெருமான்மீது, கவிஞர் திரு. கலைவாணன் அவர்கள், பழமையும் புதுமையும் பாங்குடன் விரவித்தோன்ற, அழகுறப் பாடியுள்ள நூல். காப்புப் பருவத்தில், விநாயகர் முருகன் பரமசிவன் அம்மை சண்டேசர் காரைக்காலம்மை நாவரசர் மெய்கண்டார் சிவஞான முனிவர் இராமலிங்க வள்ளலார் ஆகியோரைப் பாடியிருக்கும் திறன், போற்றி மகிழற்பாலது. புதிய புதிய கருத்துக்களும், உவமைகளும், தற்கால எழுச்சியுணர்ச்சிகளும், நூலின்கண் ஆங்காங்கே சுடர்விட்டு மிளிர்கின்றன. காரல்மார்க்ஸ் (60), காந்தி முனிவர் (58), இராசராசன் (59), வடலூரார் (57), முதலிய பற்பலரைப் பற்றிய குறிப்புக்கள், மிக்க சுவை உடையன. 36. 37, 42, 43, 45, 52, 53, 54, 65 முதலிய பல பாடல்களில், புதுமை உணர்ச்சிக் கருத்துக்கள் பொங்கித் ததும்பிப் பொலிகின்றன. ஆசிரியரின் கவிதைத் திறனும், கற்பனை நலமும், பக்தியுணர்வும், பெரிதும் பாராட்டற்குரியன. சிறந்த நல்ல இனிய உயர்ந்த கவிதை நூல்! விலை ரூபா. 1-50. விற்பனை உரிமை : 61-டி, உசுமான் சாலை, தியாகராய நகர், சென்னை-17.

—ஆசிரியர்.

"ஒன்றென்றிரு; தெய்வம் உண்டு என்றிரு"

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

158576

முன்னுரை :

"ஒன்றென்றிரு; தெய்வம் உண்டு என்றிரு" எனச் சான்றோர்கள் அனைவரும், பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில், அவ்வப்போது தோன்றி அறிவுறுத்தியுள்ளனர். தெய்வ நம்பிக்கையும், தெய்வ சிந்தனையும், மக்களையெல்லாம் உய்வித்து உயர்விக்கும் என்பது, சான்றோர்கள் அனைவரும் தகவுறக் கண்ட உண்மை.

"உபநிடதங்களை அருளிய முனிவர்கள், புத்தர்பிரான், பிளாட்டோ, பிளாட்டினஸ், இல்லால், ஃபைலோ, இயேசு, பவுல், இடைக்காலத்து விளங்கிய இசுலாமிய அருளாளர்கள் ஆகிய அனைவரும், உணர்விலும் உண்மையிலும் 'நீங்கள் கடவுளை வழிபடுங்கள்' என்று நமக்கு அறிவுறுத்துகின்றனர். நமக்கு நாமே இந்த அடிப்படை அறிவைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலம், நாம் உலகக் குடிமக்கள் ஆகலாம்; நமக்கு 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்னும் உயரிய உறவுரிமை உண்மையிலேயே ஏற்படும்". *(1)*

இறைவன் ஒருவன் உள்ளமையினைத் தொன்று தொட்டு வாழையடி வாழையாக வந்துள்ள சான்றோர்கள் பலரும், ஒவ்வொரு வகையில் நமக்குச் செவ்விதில் தெளிவுறுத்தியுள்ளனர்.

தொல்காப்பியர் :

1. ஆசிரியர் தொல்காப்பியர் தமது பழம் பெரும் நூல் ஆகிய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில், "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனக் காஞ்சித் திணையினுல், உலகத்தின் நிலையாமை இயல்பைக் கூறித் தெய்வம் தெளிவித்தருள்கின்றார்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

எனவரும் நூற்பாவில், 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்னும் தொடரினுல் புண்ணிய பாவங்கள் ஆகிய வினையின் உண்மை. அவற்றினின்று நீங்கி நாம் விடுபட வேண்டிய இன்றியமையாமை; வினையின் தொடர்பால் நாம் அறிவு விளக்கம் பெறுமல் இருக்கும் தன்மை; ஆகிய பல செய்திகளைக் குறிப்பிட்டருள்கின்றார். அம்மட்டோ! இறைவன் நம்மைப் போல வினையப்பட்டுக் கட்டுப்பட்டு நிற்பவன் அல்லன்; அவன் அதற்கு அப்பாற்பட்டுத் திகழ்பவன்; அவனது அறிவு மிகமிக விளக்கம் பெற்று மிளிர்வது; அவன் பேரறிவு

(1) "The seers of the Upanishads and the Buddha, Plato and Plotinus, Hillal and Philo, Jesus and Paul, the mediaeval mystics of Islam, ask us to worship God in spirit and in truth. By renewing ourselves in this fundamental knowledge, we shall find ourselves at home everywhere, citizens of the world, in a very real sense".

—Dr. S. Radhakrishnan,
What I Believe.

வடிவினன்; அதனல் அவன் எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் முற்பட்டு, முதற்பெருந் தலைமைப் பொருளாக விளங்குபவன்; என்பன போன்ற பலப்பல தெய்வநல இலக்கணங்களையும் புலப்படுத்தியுள்ளார். அன்றியும்,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

என்னும் நூற்பாவினல், தெய்வ வழிபாடு தேவை என்றும்; நாம் வழிபடும் தெய்வம் நம்மைப் புறங்காத்து நலங்கள் பல விளைவித் தருளும் என்றும், அவற்ருல் நாமும் நம்மைச் சார்ந்தோர்களும் பழிதீர் செல்வங்கள் பல பெற்று வழிவழியாக நீடினிது வாழலாம் என்றும் பிறவாறும்; தொல்காப்பியர் சுட்டியுரைத் திருத்தல் காணலாம்.

திருவள்ளுவர் :

2. தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருந்தகையும், 'எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன ஆதல் போல, உலகு ஆதி பகவனை முதலாக உடையது. உலகிற்கு முதல்வன் ஆகிய ஆதிபகவன் ஒருவன் உண்டு' எனத் தெய்வமுண்மை தேற்றியருள்கின்ருர். ஆதிபகவன் ஆகிய கடவுளையின்றி ஓர் அணுவும் அசையாது என்பதனை, "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத் தார்க்கும் துய்த்தல் அரிது" என்று துணிந்து மொழிந்தருள்கின்ருர். அவனை வழிபட்டு, அவனது திருவடிகளைப் புகல் அடைந்தால் அன்றி, நாம் நமது மனக்கவலைகளை மாற்றிப் போக்கிக் கொள்ளல் ஒரு சிறிதும் இயலாது என்றும் உணர்த்துகின்ருர். அறிவொழுக்கப் பண்புநலங்களில் உயர்ந்தவர்கள் ஆகிய உலகத்தார் உண்டு என்று கூறுகின்ற கடவுளை, இல்லை என்று அழித்துச் சொல்லி மறுப்பவன், மனிதனுக மதிக்கப்படாமல், அலகையாகவே இழித்துக் கருதப் பெறுவான், எனவும் குறிப்பிடுகின்ருர். ஒரு நாட்டின் நலத்திற்கு அரசன் அல்லது தலைவன் ஒருவன் இன்றியமையாமல் இருத்தல் போலவே, உலகின் இயக்கத்திற்கும் நலத்திற்கும் இறைவன் ஒருவன் இன்றியமையாதவனுக இருக்கின்ருன் என்பது, திருவள்ளுவர் வற்புறுத்தும் தெளிந்த முடிவு.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"

"நிலமக்கள் சால உடைத்தெனினும், தானை
தலைமக்கள் இல்வழி இல்"

என்பன போன்ற திருக்குறள்கள் பலவும், திருவள்ளுவரின் தெய்வக்கொள்கை பற்றிய கருத்துக்களைத் தெளிவுற விளக்கும்.

இளங்கோவடிகள் :

3. சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் பெருங்காப்பியத்தினை, மூன்று காண்டங்களாகவும், முப்பது காதைகளாகவும் வகுத்து, ஓர் அழகிய கலைக்கோயிலாக அமைத்தருளிய இளங்கோவடிகள், அந்நூலின் தொடக்கத்திற் போலவே, அதன் முடிவிலும்கூட, உலக மக்களுக்கு நலம் விளைவிக்கும் உயரிய சிறந்த உபதேசங்கள் பலவற்றைச் செய்த பின்னரே, தமது நூலினை நிறைவு பெறுத்துகின்ருர். அவ்வுபதேசங்கள், தமது காப்பியத்தின் பயனுகிய கருப்பொருளாக விளங்கும் வகையிலும், உலகத்திற்குத் தாம் அளிக்கும் ஞானச் செய்தி (Spiritual message) எனத் தக்கவாறு திகழும் வண்ணமும், அவரால் அருளிச் செய்யப் பட்டுள்ளன.

"இதுவரையில் சிலப்பதிகாரம் என்னும் இச் செந்தமிழ்க் காப்பியத்தின்கண், யாம் கூறி வந்த செய்திகளையெல்லாம் தெளிவுறக்கேட்டு வந்த திருத்தகவு உடைய நல்லோர்களே! இது காறும் எம்முடைய இந்நூற் பொருளைக் கேட்டதன் பயனுக, நீவிர் இனிமேற் பிறர்க்குக் கவலையும் துன்பமும் விளைவித்தலை விட்டொழியுங்கள்! கடவுள் உண்டு என்று நம்புங்கள். கடவுளை உணர்ந்த பெரியோர்களை விரும்புங்கள்.

பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள். பிறர் மேற் புறங்கூறுதலைக் கைவிடுங்கள். ஊன் உண்ணுதலை விலக்குங்கள். தவவொழுக்கங்கள் பலவும் மேற்கொள்ளுங்கள். பிறர் செய்த உதவியை மறவாதிருங்கள். தீயவர்களின் தொடர்பினை இகழ்ந்து ஒதுக்குங்கள். பொருள் நிறைந்த அறிவுரைகளை இகழாது ஏற்றுக் கடைப்பிடித்து ஒழுகுங்கள். அறநெறியிற் செல்லும் சான்ருேர்களின் திருக்கூட்டத்திற்கு

இடைவிடாமற் சென்று பழகுங்கள். மற நெறியிற் சென்று திரியும் தீயவர்களின் தொடர்பினின்று விடுபட்டுத் தப்பி ஓடி உய்ய முயலுங்கள். பிறர் மனைவியை நெருப்பென நினைத்து அஞ்சுங்கள். துன்புற்று வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுங்கள். இல்லறக் கடமைகளைத் தவறாது போற்றி ஆற்றுங்கள். பாவச் செயல்களைக் கடிந்து நீக்கி விடுங்கள். கள்ளும் களவும் காமமும் பொய்யும் ஆகிய குற்றங்களைக் கைவிடுங்கள். அறிவிலிகள் ஆகிய வீணர்களின் தொடர்பை அறவே ஒழித்து விடுங்கள்.

இவ்வுலகத்தில் நம்முடைய இளமையும், செல்வமும், யாக்கையும், ஒரு சிறிதும் நிலை யுடையன அல்ல. நமக்கென்று அளவிடப் பெற்றுள்ள வாழ்நாள், குறைந்து கழிந்து ஒழியாமல், ஒருகண நேரமேனும் மிகுதிப்பட்டு நில்லாது. நமக்கு நேரவேண்டிய துன்பங்கள் நேராமல், எவ்வாற்றானும் இடைநெறியில் நீங்கியொழியாது. ஆதலால், காலம் உள்ள பொழுதே, அவ்வுலகத்திற்கு, உற்றதுணை யாகிய அறங்களைச் செய்து தேடிக்கொள்ளுங் கள். வளம் மிக்க இப்பெரிய உலகத்தில் வாழும் மக்காள்! நுமக்கு யாம் கூறும் செய்தி இதுவே'' எனக்கூறி, இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தினை முடித்தருள்கின்றார். 'தெய் வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்' என்று இளங்கோவடிகள் கூறியருளும் உபதே சம் எத்துணை விழுமியது என்று சொல்லவும் வேண்டுமோ?

சீத்தலைச் சாத்தனார் :

4. அணிமிகச் சிறந்த மணிமேகலை என் னும் அரும் பெறற் காப்பியம் பாடிய சீத்தலைச் சாத்தனார், நாம் நம் தந்தையினையும் தாயி னையும் கருதல் அளவை என்னும் அநுமானப் பிரமாணம் (Inference) பற்றியே உய்த்து ணர்ந்து கொள்ளுகின்றோம். அதுபோலவே உலகத்திற்கும் கடவுள் ஒருவர் உண்டு என்ப தனை அநுமானப் பிரமாணம் கொண்டே கருதி யுணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நம் கண் ணுக்குக் காணப்படாமையினால், நாம் கடவுள் இல்லை என்று சொல்லுதல் ஆகாது என்பது, சீத்தலைச் சாத்தனார் கூறும் தெளிவுரை.

"தந்தை தாயரை அனுமானத்து அல்லது
இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்?"

எனவரும் மணிமேகலைக் காப்பிய வரிகளினால், இறைவன் ஒருவன் உளனாதலை நாம் சிந்தித்து அறிதல் வேண்டும் என்னும் செய்தியினைச் சீத் தலைச் சாத்தனார் வற்புறுத்தி விளக்கியிருத்தல் காணலாம்.

கணியன் பூங்குன்றனார் :

5. சங்ககாலப் புலவர்களுள் தலைசிறந்த ஒருவர் கணியன் பூங்குன்றனார் என்பவர். இவ் விருபதாம் நூற்றாண்டில் 'ஒரே உலகம்' (One World) என்பது பற்றிக் கற்பனைசெய்து வற் புறுத்திய வெண்டல் வில்கி (Wendell wilkie) என்னும் பேரறிஞரைப் போல, இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்னரே அத்தகைய தொரு பேருண்மையினை 'யாதும் ஊரே யாவ ரும் கேளிர்' என்னும் இனிய வரியால் விளக்கி யருளிய பெருமைக்கு உரியவர், கணியன் பூங் குன்றனார் என்னும் சங்ககாலப் பெரும் புலவரே ஆவார்.

'நாம் அறியாவண்ணம் எங்ஙனமெல் லாமோ நம்முடைய வாழ்க்கையினை உரு வாக்கிக் கொண்டு செல்லுகின்ற ஏதோ ஒரு பேராற்றல் உள்ளது' (2). சிறிதும் முறை பிறழாது செயலாற்றி வருதலின், அப்பேராற் றலை முறை என்றே பெயரிட்டு மொழிதலும் தகும். ஒரு தெப்பம் அல்லது புணையானது தனக்கென ஒரு செயலும் இன்றி, வெள்ளத் தின் நீர் ஓடும் வழியே தானும் ஓடுதல் போன்றே, ஆருயிர்கள் அனைத்தும் தமக்கென ஒரு செயலும் இன்றித் தெய்வ ஆணை ஆகிய ஊழ் என்னும் முறையின் வழிப்பட்டு இயங்கி வருகின்றன. ஞானிகள் அனைவரும் தம் முடைய ஞானக்காட்சியினாற் கண்டுணர்ந்து, இவ்வுண்மையினையே நமக்கு நன்கினிது விளக் கிப் போந்துள்ளனர்.

"நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்
காட்சியில் தெளிந்தனம் . ."

---

(2) "There is a Divinity that shapes our ends, Rough - hew them how we will...".
—Shakespeare, Hamlet

எனவரும் புறநானூற்றுப் பாடல் வரிகளால், கணியன் பூங்குன்றனர் என்னும் புலவர் பெருமான், கடவுள் உள்ளமையினையும், கடவுளின் அருளாணையாகிய ஊழ் (Destiny) என்பதொன்று உண்டு என்பதனையும், மற்றும் பல உண்மைகளையும், விளக்கியிருத்தல் காணலாம்.

மெய்கண்டசிவம் :

6. சைவசித்தாந்த ஞானப் பேராசிரியர் ஆகிய மெய்கண்டசிவம், காணப்படும் உடம்பைக் கொண்டே காணப்படாத உயிர் என்பதொன்று, உண்டென்று உணர்கின்றோம். அதுபோலக் காணப்படுகின்ற இவ்வுலகத்தைக் கொண்டே, காணப்படாத கடவுள் ஒருவர் உண்டு என்று நாம் உணர்தல் வேண்டும். இவ்வுலகம் அவன் - அவள் - அது என்னும் பாகுபாடுகள் உடையதாகவும், பலவேறு வகைத் தாய்ச் சடமாயும், சுட்டி அறியப்படுவதாயும் இருத்தலின், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை யுடையதாக இயங்கும். ''செய்வோனை இன்றிச் செய்வினை நிகழ்தல் இல்லை'' என்னும் அறிவியல் ஆராய்ச்சி முடிபிற்கு ஏற்ப, இயங்குவதாகக் காணப்படுகின்ற இவ்வுலகம், அவ்வியக்கத்திற்குக் காரணராய்க், காணப்படாமல் நிற்கின்ற கடவுள் ஒருவரை இன்றியமையா நிலையில் வேண்டியே நிற்கும்.

அக்கடவுள், இவ்வுலகத்தில் உள்ள எல்லா உயிர்களுடனும் ஒன்றாயும் - வேறாயும் உடனாயும் நிற்பார். காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல. அக்கடவுளே உயிர்களுக்கெல்லாம் காணும் உதவியும் காட்டும் உதவியும் செய்து போதருகின்றார். இத்தகைய அரிய இனிய கருத்துக்கள் பலவற்றைத் தருக்க நெறிமுறைகள் பிறழாது விளக்கிக் காட்டி, இறைவனுண்மையினை நிறுவுகின்றார் ஆசிரியர் மெய்கண்டார்!

இறைவனாலேயே உலகம் முத்தொழிற்பட்டு இயங்கி வருகின்றது என்றும்; அதனால் இறைவனே உலகிற்கு முதல்வன் என்றும்; உலகிற் பிறந்தும் இறந்தும் உழன்று வருகின்ற உயிர்களெல்லாம் கட்டுநிலை (பெத்தம்), வீடு பேற்று நிலை (முத்தம்) என்னும் இருவகைகளிலும் இறைவனாகிய முதல்வனைத் தொழுது வழிபட்டு, அவனுக்குப் பணிபுரிந்து ஒழுகியுய்தற்குரிய கடப்பாடுடையனவேயாகும் என்றும்; மெய்கண்டார் பெருமான் சிவஞான போதம் என்னும் தமது செந்தமிழ் ஞானத் தத்துவ நூலில் திறம்பட விளக்கியருளியிருக்கக் காண்கின்றோம்.

அருள்நந்திசிவம் :

7. இவ்வாறே, ஆசிரியர் அருள்நந்திசிவாசாரிய சுவாமிகள், தாம் இயற்றியருளிய சிவஞான சித்தியார் என்னும் சிறந்த சித்தாந்த சைவப் பெருநூலில், உலக இயக்கத்துக்குக் காரணமான கடவுள் ஒருவர் உண்டு என்பதனை,

ஒருவனோ டொருத்தி ஒன்றென்
　　றுரைத்திடும் உலகம் எல்லாம்,
வருமுறை வந்து நின்று
　　போவதும் ஆத லாலே,
தருபவன் ஒருவன் வேண்டும்;
　　தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அனாதி முத்த
　　சித்துரு மன்னி நின்றே

என முடிந்த முடிபாகவும், அழகுறவும் தெளிவாகவும் விளக்கி மொழிந்தருள்கின்றார்.

அம்மட்டோ! நம்முடைய உயிர்களெல்லாம் நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) என்னும் ஐந்துவகை அவத்தைநிலைகளை அடையும் இயல்பின; அத்தன்மையானது, அரசன் ஒருவன் தன்படைகளும் பரிசனங்களும் புடைசூழ வெளியே போந்து பவனி செல்லுதலும், பின்னர்த் தனது அரண்மனைக்குத் திரும்பி அந்தப்புரம் புகுதலும் போன்றதாகும்; அவ்வவத்தை யனுபவங்கள் முறையே புருவநடு கழுத்து இருதயம் கொப்பூழ் மூலம் என்னும் இடங்களில் நிகழும்; அவ்வவத்தைகளில் 35-25-3-2-1 என்னும் தத்துவக் கருவிகள் இயங்கிநிற்கும் என்பன போன்ற எத்துணையோ பல யோகஞான அனுபவச் செய்திகளைக் கூறுகின்றார். இவ்வாற்றாலெல்லாம்,

''பூதம் ஆனவை காரியங்கள்;
　　பொலிந்து மன்னி அழிந்திடும்;
ஆதலால் ஒரு நாதன் இங்குளன்
　　என்று அறிந்துகொள் ஐயனே''

என்று அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், இறைவன் ஒருவன் உளன் என்பதனையும், அவனை நாம் வழிபட்டு உய்ய முயல வேண்டுவது நமக்கு மிகமிக இன்றியமையாத தலையாய பெருங்கடமை என்பதனையும், பசுமரத்தாணி அறைந்தாற்போல நம்மனோர் உள்ளத்திற் பதியும்படி விளக்கியிருக்கின்றார்.

தாயுமானவர் :

8. நாம் இறந்துபோனால், நம்முடைய பிணமாகிய உடலை நான்குபேர் சுமக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் அவ்வளவு பெரிய சுமைமிக்க உடலைச் சுமைதெரியாமல், நாம் எங்ஙனமோ இப்போது மிகவும் எளிதாகச் சுமந்துகொண்டு இருந்து வருகின்றோம். இஃது எத்தனை வியப்பு! இது தெய்வத்தின் செயலேயன்றோ?

> "தோற்பாரம் நால்ஆள்
> சுமைஆகும்; சீவன்ஒன்றுஇங்கு
> ஆர்ப்பால் எடுத்தது
> எவராலே? பராபரமே"

என வியந்து வினவித் தாயுமானவர், நம்மைச் சிந்திக்க வைத்துத் தெய்வமொன்றுண்டு என்னும் மெய்யுணர்வை நமக்கு நல்குகின்றார்.

9. இதுமட்டுமோ? நாம் நமது தாயின் கருப்பப் பையின்கண்ணே குழந்தையாக, முந்நூறு நாட்கள் (பத்து மாதங்கள்) அடைந்து கிடந்து வளர்ந்து வருகின்றோமே! அப்போது நமக்கு அங்கு உண்ண உணவும், பருகத் தண்ணீரும், மூச்சு விடுவதற்குக் காற்றும் கொடுத்துதவிக் காப்பாற்றுபவர்கள் யார்? கடவுளேயல்லரோ? அத்தகைய அருட்பெருங் கடவுளை, நாம் நினைத்துணர்ந்து நன்றி பாராட்டுதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம் அன்றோ? என்கின்றார் தாயுமானவர்.

> "தாயர்காப் பத்தூடு அனமும்
> தண்ணீரும் தந்தருளும்
> நேய! உனை யாரே
> நினையார்? பராபரமே"

இராமலிங்க அடிகள் :

10. காற்று, என்றும் எங்கும் ஒரு நிலையில் நில்லாத இயல்பையுடையது. ஓர் இடத்திலும் நிலைத்து ஒரு கணமேனும் நில்லாமைதான், காற்றின் சிறப்பியற் பண்பு. இத்தகைய காற்றுப் போன்ற உயிரை எத்துணையோ பல எண்ணிறந்த துளைகளையுடைய ஒட்டைக்குடம் போன்ற நம்மனோர் உடலின்கண் புகுத்தி, அவ்வுயிர் ஆகிய காற்று ஓடிவிடாமல், ஒரு குறிப்பிட்ட கால அளவு அதன்கண் ஒடுங்கிக் கிடந்து உலவிவரும் வண்ணம், ஒரு பெருஞ் செயற்கருஞ் செயலைச் செய்து வைத்துள்ள மாபெருஞ் சித்தன் யாவன்? கடவுள் என்றல்லாமல் வேறு எவ்வகையில் நாம் அச்சித்தனைக் குறிப்பிடுவது?

> "நில்லாத காற்றை
> நிலையாக் கடத்தடைத்துச்
> செல்லாது வைத்தருளும்
> சிறந்தபெருஞ் சித்தன்எவன்?"

எனவினவி, இராமலிங்க அடிகளார் தாமும், நமக்கு இறைவன் ஒருவன் உண்மையினைத் தேற்றி இனிது நிறுவியருள்கின்றார்.

மனநோய் மருத்துவர் :

தெய்வ நம்பிக்கையும், தெய்வசிந்தனையும், தெய்வ வழிபாட்டுத் தியானமும், மக்களாகிய நம்மனோரின் வாழ்க்கைக்கு மிக்க பயன் அளிப்பனவாகும். இவ்வுண்மையினை உலகப் பேரறிஞர்கள் பலர், இந்நாளிற் பெரிதும் உணரத் தலைப்பட்டு வருகின்றனர். உலகப் புகழ் பெற்ற மனஇயல்நூற் பேராசிரியரும், மனநோய் மருத்துவரும் ஆகிய கார்ல் கஸ்டாவ் யங் (Carl Gustav Jung) என்பவர் குறிப்பிடும் பின்வரும் செய்தி, இங்கு நாம் பெரிதும் கருதியுணர்தற்கு உரியது.

> "கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். எத்துணையோ நூற்றுக் கணக்கான பிணியாளர்களுக்கு, யான் மருத்துவம் புரிந்துள்ளேன். அவர்களுள் மிகப் பெரும்பாலோர் 'புரொட்டஸ்டண்டுகள்'. ஒரு சிறு பான்மையினர் யூதர்கள். கடவுளை நம்புகின்ற கத்தோலிக்கர்களோ, ஐந்து அல்லது ஆறு பேர்களுக்கு, மேற்படாதவர்களே ஆவர்.
>
> என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில், அதாவது முப்பத்தைந்து வயதுக்கு

மேல், தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய இறுதி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை.

அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும், அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றி ஒழுகுகின்ற மக்கள் அனைவருக்கும் தருகின்ற மன நிறைவு ஆகிய வாழ்வியல் நல்லுணர்ச்சியினை, அவர்கள் பெற இயலாமல் இழந்து விட்டமையே யாகும். மீண்டும் சமயவுணர்வு கைவரப் பெருமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணிதீரப் பெற்றிலர்.'' (3)

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த சிலவற்ருல் தெய்வ நம்பிக்கையும், தெய்வசிந்தனையும் தியானமும், மக்களின் வாழ்க்கைக்கு எத்துணையளவுக்கு இன்றியமையாதவை என்பது, வெள்ளிடை விலங்கலாய்த் தெள்ளிதிற் புலனுகும். ஆதலின் நாம் அனைவரும் தெய்வ வழிபாட்டு நெறிகளிற் சிறப்புற ஈடுபட்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, உய்ய முயலுவோமாக! —ஆசிரியர்.

(3) During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me. I have treated many hundreds of patients, the large number being Protestants, a smaller number of Jews and not more than five or six believing Catholics.

Among all my patients in the second half of life - that is to say, over thirtyfive years- there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life.

It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook",

—Prof. Carl Gustav Jung,
Modern Man in Search of a Soul, p. 264.

Also quoted by :

(1) Dr. S. Radhakrishnan,
Recovery of Faith, P. 37.

(2) C. A. Coulson, F. R. S.
Science and Christian Belief, p. 110.

அருளாளர் அறிவுரை

ஒன்றென் றிரு; தெய்வம் உண்டென் றிரு; உயர் செல்வம்எல்லாம்
அன்றென் றிரு; பசித் தோர்முகம் பார்; நல் அறமும், நட்பும்
நன்றென் றிரு; நடு நீங்கா மலே நமக்கு இட்டபடி
என்றென் றிரு; மனமே! உனக்கே உபதேசம் இதே!

—பட்டினத்தார்.

தித்திக்கும் திருக்கோவையார்

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்,
யோகசமாஜம், அடையாறு, சென்னை - 20.

திருக்கோவையார் சிறப்பு :

எத்திக்கும் போற்றும் திருவாசகத்
தேனை ஈந்த பிரான்
தித்திக்கும் இன்பத் திருக்கோவை
தந்த திறம்புகலின்
பத்திக்கும் ஆண்பெண் சிவசக்தி
யென்று பழகிவளர்
முத்திக்கும் வித்தாக மும்மலம்
போக மொழிந்ததுவே !

காதற்பழந்தேன் :

இன்பச் சிவனை யியல்பாகச்
சீவன் இணைந்து வளர்
அன்புப் பொருளைத் திருவாச
கஞ்செய் அரும் புலவர்,
பண்புற்ற காதற் பழந்தேன்
குழைத்துப் பருகிட நாம்
நண்புற்ற சிற்றம்பலக் கோவை
தன்னை நவின்றனரே,

சிவபோகவழி :

யாதிலுந் தானும் இறைவனை
ஆன்மா இணைந்து உவக்கும்
காதலை யின்பக் கலைச்சிறப்ப
மாக்கிக் கவியளித்த
வாதவூர் வந்து மதிமந்திரி
யான வள்ளல் சிவ
போதவூர் போகப் போகவழி
யொன்று புகன்றனனே,

தேகவாழ்வில் தெய்வவாழ்வு :

போகவாழ் வெல்லாம் பொருந்துமின்
சாரப் பொலிவெனவே
யோகவாழ் வாகி யுலகினில்
ஆண்பெண் ஒருமைவளர்
ஏகவாழ் வாகி யிதயத்தில்
ஆன்மப் பொதுவினிலே
தேகவாழ் வுள்ளன்புத் தெய்வவாழ்
வாகத் திருத்தினனே.

1. கோவையின் தேவை :

மானிட வாழ்வு அன்பை வேராகக் கொண்டது; அறத்தைக் கிளையாகக் கொண்டது; அருளை மலராகக் கொண்டது; அறிவைக் கனியாகக் கொண்டது. ''அன்பின் வழியது உயிர் நிலை'' ''அறத்தால் வருவதே இன்பம்'' ''அன்பும் அறமும் பண்பும் பயனும் ஆகும்'' என்ற உண்மைகளை எல்லோரும் அறிவீர்கள். ''அன்பிலார் தம்மைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே'' என்று முறையிடுகின்றார் மணிவாசகனார். இந்த அன்புணர்ச்சிதான் அறமாகி அறத்திற்கேற்ற பொருளாகி, அதன் பயனான இன்பமாகி இன்பத்தின் வளமையான வீடாகிறது. இந்த அன்புதான் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சாதனப் படிகளாக வளர்கிறது. அன்பே கடவுள், ''இன்பமே என்பெரும் அன்பே'' என்று கடவுளைக் கூவுகிறார் மாணிக்கப்பெருமான். தமிழ் இலக்கியத்தின் தனிச் சிறப்பு அகப் பொருளும் புறப்பொருளுமாகும். அகப்

பொருள் உள்ளுணர்வு! புறப்பொருள் வெளி யுணர்வு: உள்ளுணர்வைக் கோவையாக விளக்குவதே கோவைப்பாட்டாகும். திருக் கோவையார் ஆண் பெண் உள்ளத்தில் உள்ள ஆன்மீக உணர்ச்சிகளை- சீவனில் உள்ள சிவ சக்தி சைதன்யத்தைக் கவிதையாகக் கோக்கும்,

2. அன்பின் வழி :

அன்பின் வழி அகப்பொருள்; அறத்தின் வழி புறப்பொருள். ஆண்—பெண் உணர்ச்சிக ளெல்லாம் அகப்பொருள்: ஆண்—பெண்ணின் ஆன்மக் கலப்பில் காதல் கனியும்; யோகம் முகிழ்க்கும்; சிற்றின்பம் பேரின்பமாக மலரும்.

பெண்ணின்றி ஆணில்லை
ஆணின்றிப் பெண்ணில்லை
எண்ணிருவர் சேர்ந்தே இகம்
காந்தம் முனைமாறிக்
கவர்வது போலுமே

மாந்தருள் ஆண்பெண் மயக்கு என்ற உண்மைகள் உலக வாழ்விற் குறிப்பிடத் தக்கன. உலகமே ஆண் பெண்ணின் அன்புக் குடித்தனம். ஆண் சிவம். பெண் சக்தி. இரண்டும் ஒரே மின்மீட்டியின் ஆகு மின்னலும் ஏகுமின்னலும் போன்றன. இரண்டு தன்மை களும் உயிரும் உலகும் உள்ள மட்டும் உடனிக மும். இதை யாராலும் மாற்ற முடியாது.

3. இல்லறம் மின்மீட்டி :

இயல்பான ஆண் பெண் காதல்வாழ்விற் காகவே இல்லறம் ஏற்பட்டது. அறவழி யில்லறம் உண்டானல் புறவழிச் செல்லத் தேவையில்லை. பழைய முனிவர்கள் அனைவரும் பெண் சக்தியுடன் இல்லறம் வகித்து உள்ளின்ப மும் உலகின்பமும் பெற்றனர்.

இல்லறமே வீட்டின்பம்
இல்லாளும் நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்...

இல்லறத்தின் உயிர் காதல்; காதல் என்பது ஆன்மக்கனல்; அதை இல்லறமான ஓமகுண் டத்தில் வளர்த்து, மெல்ல மெல்லக் கடவுட் காதலாக்க வேண்டும்.

காதல் உலகாக்குங் கனல் அதனை ஈசன்பால்
ஈதலே இன்பமென்று எண்.

உள்ளமும் உள்ளமும் கதுவுதலே காதலாம். ஆண்-பெண் அகக்காதலை அனுபவத்தால் மாச றுத்து, நுண்மையாக்கி இறைவனிடம் சேர்த் தலே அகப்பொருளின் பாங்காகும்.

4. நான்கு திருக்கள் :

இந்த இன்பத்திற்குப் படிப்படியாகப் பயிற்சிகளை வகுத்துக் காட்டுவது ஆகமமாகும். வேதம் தந்தை - ஆகமம் தாய் போலும், இரண்டும் சித்தாந்தத்திற் கூடிக்குழைந்து இயல்பான முக்தி நெறியைச் சீவன்முத்தி நெறியைக் காட்டுகின்றன. திருக்குறள், திரு மந்திரம், திருவாசகம், திருக்கோவை இந் நான்கும் பேரின்பத்திற்கு வழிவகுக்கும் நான்கு திருக்களாகும். இவை தமிழுக்கே உரிய அரிய சிந்தனைச் செல்வங்களாகும். இவற்றின் கருத் தெல்லாம் வேதாகமத் தெளிவாகும். தமிழுல கின் அருட்சுடர் மாணிக்கவாசகர். இந்தக் காலம் புத்தருக்கு எங்கும் சிலை நாட்டி வணங்கு தல்போல மாணிக்கவாசகருக்கு உலகெல்லாம் சிலை நாட்டி வணக்கம் செலுத்தல் வேண்டும்,

5. வழிகாட்டி :

மனிதவாழ்விற்குச் சிறந்த வழிகாட்டி யாக விளங்குகிறார் மாணிக்கவாசகர். சாதி குலம் பிறப்பு என்ற சுழிப்பட்டுத் தடுமாறும் மானிட வாழ்வைச் சிவக்கனலில் புடம் வைத்த வர் மாணிக்கவாசகர். அன்பினல் சிவமான வர் மாணிக்கவாசகர். சீவபோதம் சென்று சென்று அணுவாகத் தேய்ந்து தேய்ந்து சிவபோதமாகிக் சிவனுடன் ஒன்றுகும் யோகத்தை வாழ்ந்து காட்டினவர் மாணிக்க வாசகர். தமிழர் பண்பாட்டில் உயிரும் உடலும் போன்றவை திருவாசகமும் திருக்குறளும்.

6. சிவக்காதல் :

திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசகர் திருக்கோவையாரையும் அருளினர். திருவாச கத்தில் சீவனைச் சிவக்காதலில் உய்க்கிறார். திருக்கோவையில் சீவக்காதல் சிவக்காதலாக முதிர்ச்சியடையும் வழியைக் காட்டுகிறார்-

7. கோவை இலக்கணம் :

கோவை என்பது தொண்ணூற்ருறு வகை நூல்களில் ஒன்று. அது கட்டளைக் கலித்துறை யில் அமைந்த நானூறு பாக்களைக் கொண்டது.

அடிஅடி தோறும் ஐஞ்சீராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதினறே நிறைபதி னேழென்று
ஒதினர் கலித்துறை ஒரடிக் கெழுத்தே

என்பது கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் ஆகும்.

கோவைகள் மிகப்பலவுண்டு; அவற்றுள் மாணிக்கவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையே தலைசிறந்தது; இதில் இறையனர் அகப்பொருள், நம்பியகப் பொருள், தொல் காப்பியம் திருக்குறள் ஆகிய நூலில் காணும் அகப்பொருள்கள் இணைந்திருக்கின்றன: தஞ்சைவாணன் கோவை, பொய்யாமொழிப் புலவர் செய்தது. அது சொற்சுவை பொருட் சுவை நிறைந்தது. முழுமையும் சிற்றின்பப் பொருளானது. மணிவாசகரின் திருச்சிற்றம் பலக் கோவை சொற்பொருட் சுவையுடன் அருட்சுவை ததும்புவது. காமத்தில் ஐம்பொறி நுகர்ச்சியுடன் உடலின்பமும் உள்ளக்கிளர்ச்சி யும் உண்டாகிறது. காமநுகர்வு பாசத்தின தாகும். அதை ஆன்மக் காதலாக்கி, பாசத்தை நீக்கிப் பதியன்பாக்குவது மணிவாசகனரின் கோவையாகும்.

8. கோவைக் கருத்து :

தையலார் மையலிலே
தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து
பாசமெனும் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்து
ஓங்காரத் துட்பொருளை
ஐயன் எனக்கு அருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே!

என்பதுதான் சிற்றம்பலக் கோவையின் கருத்து. வெற்றம்பல வாழ்வைச் சிற்றம்பல வாழ்வாக மாற்றுவது மாணிக்கக் கோவையாகும். சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி யாளுவது சிற்றம் பலக் கோவையாகும்.

9. இது காமநூல் இல்லை :

எனது பதின்மூன்றும் ஆண்டு, தெய்வசிகா மணிப் புலவரிடம் நான் தொல்காப்பியம் படித்து வந்தேன். இது நான்பெற்ற பெரும் பேருகும், தெய்வசிகாமணிப் புலவர் இராம லிங்க சுவாமிகளுடனிருந்து அருட்பாவை விளக் கப்படுத்தியவர். மகாவித்வான் மீனட்சிசுந்தரம் பிள்ளையின் நண்பர். நம்பியகப் பொருள் பாடம் கேட்டபிறகு சிற்றம்பலக் கோவை கற்றேன். ஒரு வேதாந்தி ''இந்தக் காம நூலைச் சிறுவனுகிய நீ ஓதொணுது: ஓதினல் அழிவாய்'' என்ருர். இந்தக் காலம் இவ்வாறு கருதுவாரும் உண்டு; திருக்குறள் காமத்துப்பாலை மறுப்பா ரும் உண்டு. ''அழிவுக்கான நூல் மாணிக்க வாசகர் வாக்கில் வருமா? இது நல்ல ஆக்க நூல்; ஆண் பெண் வாழ்வின் அகச்சுவையை ஆன்மச் சுவையாக்கிச் சிற்றின்பத்தைச் சிற்றம் பலக் காதலாக மாற்றும் பேரின்ப நூல் என் பதை எனது ஆசிரியர் விளக்கினர்.

10. கோவை வெளியானது :

அந்தக் காலம் ஆறுமுகநாவலர் தொகுத்த சிற்றம்பலக் கோவையைப் பாண்டித்துரைத் தேவர் வெளியிட்டார். அதற்குப் பெரும் பெரும் புலவர் மணியான மீனட்சிசுந்தரம் பிள்ளை சிறப்புப் பாயிரம் வழங்கினர். அதன் கண்,

'' துரியங் கடந்து பிரியம் படர்ந்த
பேரானந்தம் ஆரா நின்ற
வேதவூரெனவும் நாதவூரெனவும்
போதவூர் எனவும் ஓதவூர் கீர்த்தி
வாதவூரடிகள் வாய்மலர்ந்தருளிய
திருக்கோவையார் எனும் தெய்வமாமறை ''

எனக்குறிக்கிருர். இன்று திருக்கோவையார் நமது கையில் இருக்கிறதென்ருல் அதன் பெருமை ஆறுமுக நாவலரையும், பாலவநத்தம் அரசர் பாண்டித்துரையையும் சேரும். ஏட்டுப் பிரதிகளை ஆய்ந்து திருத்தமாக வெளியிட்டவர் சைவப் பிரகாச வள்ளலான ஆறுமுகநாவலரே. சென்ற நூற்ருண்டில் இராமலிங்க அடிகளும் மீனட்சிசுந்தரப் புலவரும் கோவை பாடினர்.

11. இங்கிதமாலை :

வள்ளலாரின் இங்கிதமாலை பாடாண்டிணை யில் பேரின்பக் கோவையாக விளங்குகிறது. எளிய இனிய நடையில் அமைந்த அந்த அருட் கோவையில் ஒரு பாடலை நுகர்வோம்; திரு வொற்றியூர்த் தியாகேசரைத் தலைவராக வைத்து வள்ளலார் அரிய பாமாலைகளைத் தொகுத்தார்.

போகமுடையார் புகழ் ஒற்றி
யூரிற்பரம யோகியராம்
தாகமுடையார் இவர் தமக்குத்
தண்ணீர்தர நின்றனை யழைத்தேன்
போகமுடையாய் புறத்தண்ணீர்
புரிந்துவிரும்பாம் அகத்தண்ணீர்
ஈக மகிழ்வின் என்கின்றார்
இதுதான்சேடி என்னேடி

இந்த அகத்தண்ணீரே ஆத்ம தாகந்தணிக்கும் சிவனருளமுதாகும்.

12. நம்மாழ்வார் :

நம்மாழ்வார் அகச்சுவையை அமர காவியம் ஆக்கிய வள்ளல். அவரது திருவிருத்தம் சிறந்த கோவை நூலாகும். ஆழ்வார் மேகங் களைப் பார்த்துப் பாடுகின்றார்.

மேகங்காள் உரையீர் திருமால்
திருமேனி ஒக்கும்
போகங்கள் உங்களுக்கு
எவ்வாறு பெற்றீர் உயிரளிப்பான்
மாகங்க ளெல்லாம் திரிந்து
நன்னீர்கள் சுமந்து நுந்தம்
ஆகங்கள் நோவ வருந்தும் தவமாம்
அருள் பெற்றதே''

''கரும்பெரும் மேகங்கள் காணின் கண்ணன் என்று பறக்கும்'' நம்மாழ்வார், தமது ஆவியை ஆண்டவன் காதலில் ஆழ்த்தினர். ஆண்டாள் இன்புருகக் கண்ணனைப் பாடி, அவன் காதலே உயிர்ப்பாகி அவனைத் திருமணம் புரிந்தாள். ''மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம் பாவாய்'' என்று முறையிட்டாள்.

13. தெய்வக் காதல் :

அதேபேரின்பக் காதல் பற்றியே மாணிக்க வாசகர் பாடினர்: திருவாசகத்தில் மிளிரும் தெய்வக் காதலே திருக்கோவையிலும் கலந் திருக்கிறது. திருவாசகத்தை உணர்ந்தாலே திருச்சிற்றம்பலக் கோவையை உணரலாம். இரண்டும் தெய்வக் காதலின் ஊற்றாகும்; ஒன்று ஊற்றுக்கண்; மற்றொன்று மலையருவி.

உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்து
உளம்புகலும்
கரைமாண்ட காமப்
பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை
இரிந்தோடத்
துரைமாண்டவா பாடித்
தோள்நோக்கம் ஆடாமோ!

ஊனாய் உயிராய் உணர்வாய்
என் உட்கலந்த
தேனாய் அமுதமுமாய்த்
தீங்கரும்பின் கட்டியுமாய்
ஆனா அறிவாய் அளவிறந்த
பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா
கூறுதுமகாண் அம்மானாய்

என்ற உணர்ச்சிதான் சிற்றம்பலக் கோவையில் மிளிர்கிறது.

''எம் கொங்கை நின் அன்பர்
அல்லார்தோள் சேரற்க''

என்பதே அதன் பல்லவியாகும்.

—(தொடரும்)

திருமந்திர மாலை

'திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்'

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணர்,

(துணைப்பேராசிரியர், தமிழாராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,)

திருமூலநாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருமந்திரப் பனுவல் செந்தமிழ்ச் சிவாகமமாகத் திகழுஞ் சிறப்புடையது. சிவாகமங்கள், தந்திரம், மந்திரம், உபதேசம் என்னும் மூவகை உரையளவைகளையும் உறுப்பாகக் கொண்டன. அவற்றுள் தந்திரகலை என்பது, வேதாகமங்களின் வகையாகிய கருமகாண்டம் பற்றி முன்னேடு பின் மாறுகோளின்றி அநுட்டித்தலை அறிவுறுத்துவது. மந்திரகலை என்பது, உபாசனு காண்டம் பற்றி மனமுதலியன அடக்கித் தெய்வத்தை வழிபடும் முறையினை விரித்துரைப்பது. உபதேசகலை என்பது, ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவுமில்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனுதலும், தன்னின் வேருகிய பசுபாசங்களையுடையனுதலும் முதலிய இறைமைக் குணங்களைத் தான் உணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் விளங்க அறிவுறுத்துவது.

இனி இம்மூவகைக் கலைகளையும் ஞானகாண்டம் ஒன்றே பற்றிப் பின்வருமாறு பகுத்துரைத்தலும் உண்டு. சாத்திரங்களை முன்னெடு பின் மலைவறக் கொள்வது தந்திரகலை. கரணங்களுடைய செயல்வகைகளையடக்கித் தாம்தாம் வேண்டிய தெய்வங்களை அந்தந்த மந்திரங்களினுலே வழிபடுவது மந்திரகலை. தனக்கு முதலும் முடிவும் இல்லாத பரமேசுவரனுடைய சிவஞானத்தைப் பக்குவ ஆன்மாக்களுக்குப் போதிப்பது உபதேசகலை. ஆகமங்களுக்கு அங்கமாகிய இம்மூவகை உரையளவைகளையும் சிவஞானசித்தியார் சுபக்கம் 13-ஆம் செய்யுளில் அருணந்தி சிவனர் தெளிவாக விளக்கியுள்ளார்.

மேற்குறித்த தந்திரம் மந்திரம் உபதேசம் என்னும் மூவகை உரைத்திறங்களையும், தன்னகத்தே கொண்ட செந்தமிழ்ச் சிவாகமமாகத் திகழ்வது திருமூலர் அருளிய திருமந்திரமாலையாகும். தந்திரம் மந்திரம் உபதேசம் என்னும் இம்மூன்றினுள் நடுவே நின்ற மந்திரம் என்பது முன்னுள்ள தந்திரத்தோடும் பின்னுள்ள உபதேசத்தோடும் பிரிவின்றி இயைந்த தலைமையுடையதாய்த் திகழ்தல் பற்றித் திருமூலநாயனுர் தாம் சிவனருளாற் சிந்தித்து ஓராண்டுக்கு ஒரு பாடலாக அருளிய இத்தமிழாகமத்தை 'மந்திரமாலை' எனக் குறித்துள்ளார். தமிழ் மூவாயிரமாகிய இத்திருமந்திரப் பாடல்கள் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பெற்றன. இந்நுட்பம்.

> 'தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
> சுந்தர வாகமச் சொன்மொழிந் தானே'
>
> (திருமந்-101)

எனவரும் இந்நூற் பாயிரப் பாடலால் அறியப்படும்.

சைவசமயத்திற் கூறப்படும் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் விளக்கும் முறையில் நாற்சீரடி நான்கு கொண்ட கலிவகையாப்பினல் திருமூலர் இத் திருமந்திரமாலையை அருளிச் செய்துள்ளார். ஒற்றுநீக்கி எழுத்தெண்ணுங்கால் அடிதோறும் பன்னிரண்டெழுத்தும் ஈற்றடி நேரிசையினைக் கொண்டு தொடங்கியதாயின் பதினேரெழுத்தும் பெற்று வெண்டளை பிழையாது வருவது இத்திருமந்திரயாப்பாகும். செப்பலோசை தழுவிய இக்கலிப்பாவகை முதன்முதலாக இத் திருமந்திரத்தில்தான் காணப்படுகின்றது. இது பற்றி இதனைத் திருமந்திரயாப்பு என வழங்குவர் விபுலாநந்த அடிகளார்.

இந்நூலுக்குத் திருமூலர் இட்டபெயர் திருமந்திரமாலை என்பதாகும். ''ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை' எனச் சேக்கிழாரடிகளும், 'மூலர் திருமந்திரமாலை' என உமாபதிசிவமும் குறித்துள்ளமை காணலாம். இந்நூல் மூவாயிரந்தமிழ்ப் பாடல்களையுடைமைபற்றித் 'தமிழ் மூவாயிரம்' எனவும்

வழங்கப்பெறும். ''முன்னிய அப்பொருண்மா லைத் தமிழ்மூவாயிரம்'' என்பது பெரியபுராணம்.

சைவத்திருமுறைகளுள் பத்தாந்திருமுறை யாகப் போற்றப் பெறும் இத்திருமந்திரம், 'மறைமொழிகிளந்த மந்திரத்தான' எனத் தொல்காப்பியர் வகுத்த மந்திரச் செய்யுள் வகையுள் அடங்குதலால் திருமந்திரம் எனப் பெறுவதாயிற்று. தாம் சொல்லிய சொல்லின் பொருண்மை எங்கும் எப்பொழுதும் குறை வின்றி நிறைந்த பயனைத் தரும்படி சொல்ல வல்ல நிறைமொழி மாந்தராகிய பெரியோர், 'இஃது இவ்வாறு ஆகுக' என ஒன்றினைக் குறித் துத்தமது ஆணையாற் சொல்லப்பட்டு, அவ்வாற் றல்அனைத்தையும் தன்கண் அடக்கி வைத்துள்ள செறிவுடைய நன்மொழியே மந்திரம் எனப் படும். இதன் இயல்பினை,

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'

எனத் தொல்காப்பியனாரும்,

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்'

எனத் திருவள்ளுவரும் இனிது விளக்கியுள்ளார். கள். 'நிறைமொழி என்பது, அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி' என்பர் பரிமேலழகர். நிறைமொழி மாந்தராவார், யான் எனது என் னும் இருவகைப் பற்றுக்களையும் நீத்து ஐம் புலங்களையும் அடக்கி எவ்வுயிர்க்கும் அருளு டையராய் வாழும் பெரியோர். ஆணையிற் கிளத்தலாவது, 'இஃது இவ்வாறு ஆகுக' எனத் தம்முடைய ஆற்றல் புலப்படச் சொல் லுதல். மறைமொழி - புறத்தார்க்குப் புலனு காமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர் என்பர் பேராசிரியர். இனி, மறைமொழி என் பதற்குப் பக்குவமில்லாதார் பலர்க்கும் புலப் படாமல் மறைந்துள்ள அரிய உண்மைகளைத் தன்னகத்தே பொதிந்துள்ள மொழி எனப் பொருளுரைத்தலும் பொருந்தும். சான்றோர் எண்ணியவண்ணம் செயற் படுத்தற்குரிய ஆற்றல் முழுவதும் தன்கண் வாய்க்கப் பெற்ற மொழியே மந்திரமாம் என்பார், அதனை 'வாய்மொழி' என்ற மற்றொரு பெயராலும் தொல்காப்பியர் குறித்துள்ளார்.

சபித்தற் பொருட்டாகிய மந்திரச் செய்யுளை அங்கதப் பாட்டெனவும், வசைப் பொருட் டாகாது உலக நலங்குறித்து வரும்மறை மொழியினையே மந்திரம் எனவும் வழங்குதல் தமிழ் மரபு. திருமூலநாயனர் அருளிய திருமந் திரமாலை உலகநலங் குறித்தமைந்த தமிழ் மந்திரங்களுக்குரிய சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது. 'ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்' (85) எனத் திருமூலநாயனரும்; 'சிவயோகமிகு மந்திரமாமுறையொன்று' என உமாபதி சிவமும் இத்திருமுறையினை மந்திரப் பனுவலாகக் குறித்துள்ளமை அறியத்தகு வதாகும். தமிழ் மூவாயிரமாகிய இந்நூல், பொருள் தொடர்புடையதாய் மாலைபோன்று அமைந்திருத்தலின் திருமந்திரமாலை எனப் பெயர்பெறுவதாயிற்று.

திருக் கயிலையிலிருந்து அகத்திய முனிவரைக் காணவேண்டித் தென்றிசை நோக்கிவந்த சிவ யோகியார், திருவாவடுதுறையினை யணுகிய நிலையில், அங்கு ஆக்களை மேய்த்தமூலன் என் னும் இடையன் இறக்க, அவனது பிரிவாற்ரு மல் ஆக்களடைந்த துயரத்தை நீக்க எண்ணி மூலனுடம்பில் தமது உயிரைப்புகுத்தி இறை வனது திருக்குறிப்பின்படி மூலன் உடம்பில் இருந்த வண்ணம் திருவாவடுதுறையில் சிவ யோகத் தமர்ந்து ஒவ்வோராண்டிற்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரந் தமிழ் மந்திரங்களை அருளிச் செய்தார் என்பது வரலாறு. சிவ யோகியார் மூலனுடம்பிற் புகுந்த நிலையில் அவரது பழைய உடம்பினைச் சிவபெருமான் மறைத்தருளியதன் நோக்கம், திருமூலர் இறைவனூலாகிய சிவாகமங்களை இந்நிலவுல கில் தமிழால் வெளியிடுதல் வேண்டும் என்னும் பெருங்கருணைத் திறமேயாகும். இறைவரது இத் திருவருட் குறிப்பினையுணர்ந்த திருமூலர் திருவாவடுதுறையில் அம்மையப்பரை வணங் கிப் படரரசின்கீழ்ச் சிவயோகத் தமர்ந்திருந்து தமிழாகம மாகிய இத் திருமுறையினை அருளிச் செய்தார். இச்செய்தி,

'சிந்தை செய்தாகமஞ் செப்பலுற்றேன்'
(திருமந்-73)

எனவும்,

'என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே'
(திருமந்-81)

எனவும் இந்நூலகத்துக் காணப்பெறும் அகச் சான்றுகளாலும் புலனாதல் காணலாம். ஃ

திருவள்ளுவரது கடவுட் கொள்கை

['சித்தாந்தக் கலைச்செல்வர்' திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி.,]
திருவாவடுதுறை ஆதீனம்.

ஒழுக்கநெறியை உணர்த்தும் ஆசிரியர் இரு திறத்தினர்; கடவுட் கொள்கையை அடிநிலையாக நிறுத்தி. கடவுளது ஆணையே ஒழுக்க நெறி என உணர்த்துவோர் ஒரு சாரார்; ஒழுக்கமே மக்களுக்கு விழுப்பந்தருவது; கடவுள் இருப்பு அறியவாராது; மேலும் கடவுட் கொள்கை ஒழுக்க நெறியின் விலகுவோர்க்கு மன்னிப்புத் தெரிவிப்பது. ஆதலால், அறமே தெய்வம் என மக்களைத் தெளிவிப்பதே அவர்தம் வாழ்க்கையை உயர்த்தும் என்பர் மற்றொரு சாரார். இவ்விருவகையினருள் திருவள்ளுவர், அல்லவை செய்வார்க்கு அறங் கூற்றுகும் என்பதைக் கூறுபவரேயாயினும், இறைவன் உண்மையைத் தெளிந்து, பிறரையும் தெளிவிக்கும் திறவோர் என்பதை முதற் குறள் ஒன்றே துணிவிப்பதாக உள்ளது.

திருவள்ளுவர் கடவுள் என்னும் சொல்லைத் தம் குறட்பாக்களில் ஆளவில்லை; ஆயினும், இறைவன் என்னுஞ் சொல்லைக் கடவுளைக் குறிப்பதாக ஆண்டுள்ளார் என்பது மறுக்கவொண்ணாத உண்மை.

முதலதிகாரமாகிய 'கடவுள் வாழ்த்துள், பிற ஆசிரியர்கள் கூறும் மங்கல வாழ்த்துப் பாடல்களிற் போல, வாழ்த்தப்படுபொருளை யாதானும் ஒரு மரபு பற்றித் துணிந்ததாக வைத்து வாழ்த்தவோ, வணங்கவோ, போற்றவோ, பரவவோ, பொருளியல்பு கூறவோ புகுந்தார் அல்லர் திருவள்ளுவர். தமக்கு முன் ஒருவரும் தமிழ்நூல்களில் கூறியிராத தனிச் சிறப்பு முறை ஒன்றை மேற்கொண்டு, செம்பொருள் கண்டுணர்ந்தாராகிய தெய்வப் புலவர் காணப்படும் உலகைக் காட்டி, அதனை மறைந்து உடன் நின்று தொழிற்படுத்தும் இறைவனது உண்மையைக் கருதல் அளவையால் அறிவுடையார் தெளியும்படி தேற்றுகின்றார்.

> அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
> பகவன் முதற்றே உலகு

என்பது முதற்குறள்.

எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையன; அதுபோல, உலகு ஆதிபகவனாகிய முதலை உடையதே - என்பது பாட்டின் பொருள்.

எழுத்தெல்லாம் என்பதற்கும், எல்லா எழுத்தும் என்பதற்கும் உள்ள வேறுபாடு, திருக்குறள், தொல்காப்பியம் என்னும் நூல்களுள் வழங்கும் வழக்குப்பற்றி, அறிதற்கு உரியது. முன்னையது எழுத்துக்களை ஒரே தொகுதியாகக் கருதுவித்து (Collective Noun) ஒரு பொதுத்தன்மையைக் குறிக்கும்; பின்னையது எழுத்துக்களின் பலவகையினையும் தனித் தனிக் கருதவைத்து (Noun of multitude)ப் பல இயல்புகளையும் குறிக்கும். இப்பாட்டின்கண் எழுத்துக்கள் எல்லாவற்றையும் தொகுதியாக எடுத்துக் கொண்டமையால், அதன் வகைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாக உள்ளதொரு காரணத்தைக் குறிக்கொண்டு கூறுகின்றார் ஆசிரியர் என்பது உணரப்படும். முதல் - காரணம்.

அகரமாகிய ஒலி அங்காந்து இயலும் இயற்கை முதல் ஒலி என்பதும், பிற எழுத்துக்கள் அதனைச் சார்பாகக் கொண்டு அதனோடு பொருந்தியே இயலும் செயற்கைத் தோற்றம் உடையவை என்பதும் எழுத்துக்களின் பிறப்பியலானும், ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரத்தானும் எளிதின் உணரப்படும் இயல்புகள். ஆதலால், எழுத்தின் வகைகள் எல்லாம் இயற்கையின் இயலும் அகர ஒலியைத் தமக்குச் சார்பாய் உடனின்று செலுத்தும் முதலாகப் பெற்றவை; அதுபோல, உயிரும் உயிரில் பொருள்களும் ஆகிய உலகின் வகைகளும் ஆதிபகவனைத் தமக்குச் சார்பாகவும் உடனின்று செலுத்தும் முதல்வனாகவும் உடையவையே என்னும் உய்த்துணர்வு முதற்குறளால் தோன்றும்.

முதல் என்னும் சொல், தொழில் முதல் நிலை (காரகம்) எனப்படுகின்ற செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள், இன்னதற்கு எனப்படும் கொள்வோன், பயன் என்னும் எட்டுக் காரணங்களையும் குறிக்கும். ஏற்புழிக் கோடல் என்னும் பொருந்துமாறு பற்றி நிலன், செய்வது என்னும் இருவகையினையும் இங்கு அச்சொல் குறிக்கின்றது. முதல் என்னும் சொல் இவ்விருவகையினையும் குறித்தலை அதன் அடையாக உள்ள ''ஆதிபகவன்'' என்னும் சிறப்புப் பெயர் குறிப்பிக்கின்றது. ''போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்'' என்ற இடத்திற்போல, ஆதி என்னும் சொல் உலகிற்கு முதற்கண் சார்பாக அல்லது நிலைக்களன் ஆக நின்றநிலையை உணர்த்தும்; அங்ஙனம் சார்பாக நின்ற பொருளே வினைமுதலும் (முதல்வனும்) ஆதலைப் பகவன் என்னும் சொல்லின் னகர ஈறு துணிவிக்கும். இங்ஙனம் ஆதலின், பலவகைப்படத் தோன்றிக் காணப்படுவதாய்த் தன்வயம் இன்றித் தொழிற்படுவதாயுள்ள, உலகு தனக்குச் சார்பாய் முதற்கண் அமைந்து, தன்னை உடனின்று தோற்றி நடாத்தும் ஒரு முதல்வனை உடையது; அவன் தனது பெற்றி பற்றி ஆதிபகவன் எனத் தக்கவன் என்பது முதற்குறட்பாவின் கருத்தாயிற்று.

பகவன் என்னும் பெயர் தொழத்தகு தன்மையோன் (சேவியன், பூச்சியன்) என்னும் பொருளைத்தரும். இது வழக்காலும், ஆரிய நிகண்டாலும் உணரப்படுவது. அடுத்துவரும் குறட்பா,

> கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்

என அவன்றன் தாள்தொழுதலைக் கல்விப் பயனாகக் கூறுதல் பற்றியும் அப்பொருள் வலியுறும்.

இதனால் இயற்கையில் தூய முற்றுணர்வு உடைய முதற்பொருள் ஒன்று என்றும் உள்ளது; அதன் ஆற்றலால்தான் இவ்வுலகின் பல்வேறு பகுதிகள் தம்தம் முதற் காரணத்தினின்றும் ஆக்கப்பெற்று நடக்கின்றன; அப்பொருள் செயற்கைச் சிற்றறிவுடைய உயிர்களால் உணர்ந்து தொழற்பாலது என்னும் துணிவுடையவர் திருவள்ளுவர் என்பது எளிதின் உணரப்படும்.

இனி, ஆதிபகவன் என்னும் தொடரில் உள்ள இரு சொற்களையும் தமிழ்ச் சொற்களே யாதல் வேண்டும் என்போர் ஆதி என்றது உலகப் பொருள்களை ஆக்கும் அறிவு செயலாற்றலைக் குறிக்கும் எனவும், பகவன் என்றது, அவ்வாதியைத் தன்னிற் பிரிவிலாத தன்கூறாக உடையவன் எனவும் குறிக்கும் எனச் சொற்பொருட் காரணங் கொள்வர். எங்ஙனமாயினும், உலகைத் தோற்றி நடாத்தும் ஒரு முதல்வன் உளன் என்பதை முதற்குறள் உணர்த்த எழுந்தது என்பது தேற்றம்.

இக்குறட்பாவுக்கு இங்ஙனம் அளவை முறைக்கு மாறுபடாத உரைகாண்பது சைவர் கருத்து என்பதைப் பின்வரும் சிவஞான சித்தித் திருவிருத்தம் குறிக்கின்றது:

> ஒன்றென மறைக ளெல்லாம்
> உரைத்திட உயிர்கள் ஒன்றி
> நின்றனன் என்று பன்மை
> நிகழ்த்துவது என்னை என்னின்,
> அன்றவை பதிதான் ஒன்றென்
> றறையும்;அக் கரங்கள் தோறும்
> சென்றிடும் அகரம் போல
> நின்றனன் சிவனும் சேர்ந்தே.

திருவருட்பயன் என்னும் சாத்திரமும், முதற் குறளையே பின்பற்றிக் கடவுள் உண்மையினைப் பின்வரும் குறட்பாவால் தெரிவிக்கின்றது:

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

என்பது அந்நூலின் முதற்பாட்டு.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

என்பது அதனைத் தொடரும் இரண்டாம் பாட்டு.

நிலைபெற்ற அல்லது மிகுதியான உயிர்கள் தம் நிலையாமையாகிய பிறப்பு நெறியின் நீங்கி, முதற் பொருட்கு உரிய செம்பொருட் பண்மையினைச் சாரும் வண்ணம் துணைபுரியவல்ல ஒரு பேராற்றல் உள்ளது; அது சத்தி எனப்படும்: அச்சத்தியினின்றும் நீங்குதலின்றி அதனைத் தன்னிற் பிரிவிலாதபடி உடன்கொண்டவன் எங்கள் தலைவன் என்பது பாட்டின் பொருள். ஆதிபகவன் என்பதைத் தமிழ்த் தொடராகவே கொண்டு உரைத்ததாக இப்பாட்டு அமைந்திருத்தல் கருதி வியந்து மகிழ்தற்கு உரியது.

இனி, முதற்குறளில் ஆதி என்னும் பொருள் அடையை உவமையாகிய அகரத்திற்குக் கூட்டி ஆதிஅகரம் எனக்கொண்டு பின்வருமாறு பிறர் பொருட்டு அனுமானமாக உரைத்த புலமை நலங்கனிந்தோரும் உளர்:

1. "உலகு ஆதிபகவன் முதற்றே" என்பது மேற்கோள்;

2. எழுத்தெல்லாம் ஆதி அகர முதல்; (அது போல) என்பது எடுத்துக்காட்டு அல்லது திருட்டாந்தம்.

இரண்டும் கூறவே, ஏதுவும், திருட்டாந்தத்தை ஏதுவோடு இயைத்துத் துணிவுரையும், உய்த்துணர்ந்து உடன் சேர்க்கப்படும்; அவை வருமாறு:—

3. தன்வயத்ததன்றித் தொழிற்பாடு உடைமையின் - ஏது.

4. யாது யாது தன்வயத்ததன்றித் தொழிற்பாடு உடையது, அஃது அது தனக்கு முதலாவ தொன்றனை உடையதும் ஆம் - வியாத்தி உரை.

(எழுத்தெல்லாம் ஆதி அகர முதல ஆதல் போல - என முடிக்க).

இங்கு ஆதி அகரம் என்றது நாதத்தை; அஃதாவது, பேச்சும் எழுத்துமாகப் புறத்திசைக்கும் எழுத்தின் வகை எல்லாவற்றுக்கும் மூலமாக அகத்திசைத்து நிற்கும் பொருளை நோக்கிச் செல்லும் கருத்துணர்வை (Conceptual thinking or ideation). எனவே, உருவாய் வெளிப்படும் எழுத்தெல்லாம் அருவாய் அக ஒளியாய் உள்ளக் கருத்துணர்வைக் காரணமாக உடையவை; அதுபோல, உருவாய்ப் பரிணமித்துக் காணப்படும் உலகு அருவாய் இயற்கை உணர்வாய் உள்ள ஆதிபகவனது உணர்வாற்றலால் தொழிற்பட்டு அவனைத் தனக்கு முதலாக உடையதே என்பது கருத்து.

மகாபாரதம்

அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

இடிம்ப வனம் சேர்தல் :

புரோசனன் பாண்டவர்கள் தன்னை நம்பியிருப்பதாகவே கருதினான். கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி வந்தது. அன்றிரவு எரித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

எரியூட்டுதல் :

குந்திதேவி அன்றிரவு அன்னதானம் செய்தாள். இரவு அதிகம் ஆனவுடன் எல்லோரும் குந்தியிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

ஒரு வேடச்சி கெட்ட எண்ணத்துடன், புரோசனனுடைய ஏவலினால் குந்திக்கு நண்பாகப் பழகினாள். அன்று அந்த வேட்ச்சி தேன் கனி கிழங்கு இவைகளை எடுத்துக்கொண்டு தன் ஐந்து புதல்வர்களுடன் வந்தாள். காலம் பார்த்து நஞ்சிடக் கருதியவள் அவள். குந்தி கொடுத்த அன்னத்தையுண்டு, மதுபானமும் செய்து மயங்கி ஒருபுறம் அயர்ந்து உறங்கிவிட்டார்கள் அந்த அறுவரும்.

புரோசனனும் ஒருபுறம் கால தேவதையால் தூண்டப்பட்டுத் தூங்கிவிட்டான்.

நடுநிசி; எங்கும் அமைதி. கனகன் சொன்னதை உடன் பிறந்தார்கட்கும் தாய்க்கும் பீமன் சொல்லித் தன் படுக்கை வீட்டில் தன் கட்டிலின் கீழ் அமைத்திருந்த சுரங்கத்தின் வழியே, குந்தி தேவியையும், தருமர் முதலிய நான்கு துணைவர்களையும் போகச் செய்தான். அவர்களை அனுப்பிவிட்டு, தீயை எடுத்து அந்த வீட்டில் வைத்தான். அது குபீர் என்று சேர்ந்து பற்றியது. சணல், நெய்யில் நனைத்த விறகு, மெழுகு இவைகள் யாவும் கொழுந்துவிட்டு எரியலாயின. பீமசேனன் சுரங்கத்தில் நுழைந்து ஓடினான். உறக்கம் இன்மையாலும் அச்சத்தாலும் நடக்கும் ஆற்றல் இல்லாத தாயாரை முதுகிலும், தருமரையும் தனஞ்செயனையும் தோள்களிலும், இரட்டையரை இருகரங்களிலும் எடுத்துக்கொண்டு காற்றின் மகனாகிய ஆற்றல் மிகுந்த பீமன் விரைந்து ஓடினான்.

அந்தச் சுரங்கம் காசிநகரைக் கடந்து கங்கைக் கரைவரை சென்றது. அங்கு அறுவரும் மேலே வந்தார்கள். அப்போது செம்படவன் விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு, பாண்டவரிடம் வந்து கும்பிட்டான்.

ஓடத்தில் கங்கையைக் கடந்தது :

"ஐயன்மீர்! நான் விதுரரால் அனுப்பப்பட்டு இங்கு வந்தேன். 'காடுகளை எரிப்பதும், குளிரைப் போக்குவதுமான ஒன்று வளைக்குள் வாழும் எலியை அழிக்காது' என்று அவர் உங்களிடம் கூறிய வார்த்தைகளை அடையாளமாகக் கூறினேன். என்னை நம்புங்கள். இதோ உயர்ந்த படகு ஆயத்தமாக வைத்திருக்கின்றேன். தாமதிக்காமல் ஏறுங்கள். உங்கள் சிறிய பிதா சிலகாலம் உங்களை மறைந்து வாழுமாறு கட்டளையிட்டிருக்கின்றார்" என்றான்.

அந்தப் பெரிய கப்பலில் ஏறிக் கங்கையைக் கடந்தார்கள். ''ஜய ஜய'' என்று மங்கள வசனம் கூறி அந்த செம்படவன் விதுரருடைய ஆசியைக் கூறிச் சுகமே போய் வாருங்கள் என்று கூறி நின்றான்.

தங்களுக்கு நேர்ந்த ஆபத்தை எண்ணியும் பசி தாகத்தால் களைத்தும் மனம் வருந்திய பாண்டவர்கள் தெற்கு நோக்கி நடந்தார்கள். நடக்க முடியாத பொழுதெல்லாம் பீமசேனன் அவர்கள் ஐவரையும் வெகு சுலபமாகச் சுமந்து யாரும் தங்களைப் பார்த்துவிடக் கூடாது என்ற பயத்தால் ஓடினான். வழியில் ஒரு மரம் நின்றால், அதனைக் காலால் உதைத்துச் சாய்த்துச் செல்வான்.

நகர மக்களின் வருத்தம் :

அரக்கு மாளிகை கொழுந்துவிட்டு விண்ணளவாக மண்டிபற்றி எரிகின்றபோது வாரணாவதத்து மக்கள் கண் விழித்து அதைச் சுற்றி நின்று மிக்க துயரம் அடைந்தார்கள்.

உத்தமமான பிள்ளைகள் பாண்டவர்கள். இவர்களை எரிப்பதற்காகவே இந்த வீடு துரியோதனனால் கட்டப்பட்டது போலும். பாவி மந்திரி புரோசனன் வஞ்சனைக்காரன். திருதராஷ்டிரனுக்கும் இது தெரிந்துதான் இந்தக் கொடுமை செய்யப்பட்டது. அந்தோ! குந்தி கொடுத்து வைக்காதவள். கணவனை யிழந்தாள். மக்களுடன் இந்தத் தீயில் அகால மரணம் அடைந்தாள். பீஷ்மரும், துரோணரும், கிருபரும் இதை அறிய வில்லையோ? வேடச்சியைக் குந்தியின் சரீரம் என்றும், அவளது புதல்வர்கள் ஐவரின் உடம்பு களைப் பாண்டவர்களின் சரீரம் என்றும் கருதி, வாய் விட்டுக் கதறி அழுதார்கள். தீ அணைகின்றபோது சுரங்கவேலை செய்த கனகன் விதுரருடைய முன் ஏற்பாட்டின்படி அங்குக் கூட்டத்தில் கலந்து சுரங்கத்தை மற்றவர் அறியாவண்ணம் மண்ணைத் தள்ளி மறைத்துவிட்டான். பாண்டவர்கள் எரிந்து போன செய்தியைத் திருதராஷ்டிரனுக்குச் சொல்லி யனுப்பினார்கள்.

திருதராஷ்டிரன் எல்லோருடனும் மிக விரைந்து வாரணாவதம் போனான். கோடைக் காலத்தில் குளம் அடியில் குளிர்ந்தும் மேலே வெது வெதுப்பாகவும் இருக்கும். அதுபோல் பாவி திருதராஷ்டிரன் மேலே துக்கப்படுப வனைப்போல் நடித்து அழுதான். உள்ளுக்குள் உவகை. ''என் புதல்வர்களே! இனி எப்போது உங்களை அடையப்போகின்றேன். ஐயோ! என் தம்பியின் தவப் புதல்வரே!'' என்று கூவியழுதான். ''விதுரா! பாண்டவர்களையும் குந்தியையும் கருதி என்ன என்ன தான தருமம் செய்தால் நல்லதோ அத்தனையும் செய்'' என்றான்.

எல்லோரும் ஒற்றையாடையுடுத்து நின்று எரிந்த எலும்புகளை உண்மையிலேயே பாண்டவர்களுடையது என்று எண்ணி ''ஆ! புண்ணியர்களே! தருமா! பீமா! அர்ச்சுனா! நகுலா! சகதேவா! அம்மா! குந்தி'' என்று அழைத்து அழுதார்கள்.

துரோணரது வருத்தம் :

துரோணர் ஒரு புறம் அந்த எலும்புகளைக் கண்டு ''அர்ச்சுனா! நீ எரிந்தாய் என்பதை என்னால் நம்ப முடியவில்லையே! குழந்தாய்! வீடு தீப்பிடித்தவுடன் வருண மந்திரத்தை உச்சரித்தால் அது நனைந்திருக்குமே. உறங்கிய படியால் உணர்வற்று எரிந்து போனாயோ? நீ! என்னிலும் பெரிய வில்லாளியாக விளங்கினாயே! இரவு பகலாகக் கற்ற கலைகள் உன்னுடன் எரிந்தனவே! உத்தமமான மாணவன் நீ! அடக்கமே ஒரு உருவாகிய உன்னை இனி எப்பிறப்பில் காண்பேன்'' என்று கூறி அழுதார்.

பீஷ்மருடைய புலம்பல் :

பீஷ்மர் உறுதியுள்ளம் படைத்தவராக இருந்தும் பாண்டவர்களுடைய பிரிவு என்ற ஈட்டி அவருடைய உள்ளத்தைப் பிளந்தது. கண்ணீர்விட்டுக் கதறினார். ''தந்தையை யிழந்த தனயர்களே! அம்மா மருமகளே! நீ மக்களுடன் மாண்டு போனாயே, பழுக்குந் தருவாயில் மரம் காற்றில் முறிந்து விழுந்தது போல் தருமா! நீ நல்ல பருவத்தில் மாண்டனையே! உனது தருமம் உன்னைக் காக்கவில்லையா! பீமா! இந்தக் குலத்துக்கு நீ வயிரத்தூண்போல் நின்றனையே! உன்னைக் கண்டு கண்டு கண் களித்தேனே. நீ முயன்றால் முடியாதது ஒன்று உளதோ. இந்த அக்கினியை

அணைக்க உன்னால் முடியவில்லையோ ? அர்ச்சுனா! உன் மந்திர சக்தி மறந்துவிட்டதா? ஒரு துரும்பை நீ வருண மந்திரஞ் சொல்லி விடுத்தால் இத்தீயணையுமே? தாய் தந்தை இருவர்களையும் பிரிந்த நகுல சகதேவர்களே! பரதவம்சத்து விளக்குகளான நீங்கள் அணைந்து விட்டீர்களே! உலகமே இருண்டுவிட்டதே. என் இருதயம் வெடிக்கின்றதே. ஆ! குழந்தைகளே! இப்படி ஒரு விதிவரும் என்று நான் கனவிலுங் கருத வில்லையே. இதை என்னால் நம்ப முடியவில்லையே? உண்மையில் நீங்கள் மாண்டு போனீர்களா?'' என்று வாய்விட்டுக் கூறிப் புலம்பியழுதார்.

விதுரர் மட்டும் அதிகம் அழவில்லை. அவர் ஒருவர்தான் உண்மை யறிந்தவர். அவர் இரகசியமாகப் பீஷ்மரிடம் வந்து பாண்டவர் இறக்கவில்லை என்று கூறி ''அவர்கட்கு நீர் எள்ளுந் தண்ணீரும் விடவேண்டாம்'' என்றார்.

விதுரருடைய சொல்லைக்கேட்டுப் பீஷ்மர் கவலை தீர்ந்தார்.

துரியோதனன், ''அண்ணா! தருமா! தம்பிமார்களே!'' என்று கதறியழுது, வேடர்களின் எலும்புகளைக் கொண்டுபோய் கங்கையில் சேர்த்து கிரியைகளைச் செய்தான். புரோசனன் மாண்டதை அறிந்து மகிழ்ந்தான். சில அறிஞர்கள் பாண்டவர்கள் மரணமடைந்திருக்க மாட்டார்கள் என ஊகித்தனர். சாதாரண மக்கள் வருந்தினார்கள்.

துரியோதனன் ''தனது முயற்சி பயன் பெற்றது; இனி நமக்கு அச்சம் இல்லை. இந்த அரசு நம்முடையதுதான். அறிவினால் நாம் முன்னேற்ற மடைந்தோம்'' என்று எண்ணி உள்ளம் உவந்து எல்லோருடனும் அத்தினாபுரம் சேர்ந்து கவலையின்றி வாழ்ந்தான்.

பாண்டவர் காட்டில் துன்புற்றது :

பீமன் நடக்கும்போது அந்தக் கானகமே அசைந்தது. கருட பகவானும் காற்றுக் கடவுளும் ஒன்று சேர்ந்து போவது போன்ற கடும் வேகத்தில் சென்றான். மரங்கள் செடி கொடிகள் முறிந்து முறிந்து விழுந்தன. வழியில் பல காட்டாறுகளைப் பீமன் ஐவர்களையும் சுமந்துகொண்டு தெப்பம்போல் நீந்திக் கடந்தான்.

பொழுது விடிந்தது. அன்று பகல் முழுவதும் நடந்து சென்றார்கள். இரவு 15 நாழிகைப் பொழுதில் ஒரு அடர்ந்த வனத்தை அடைந்தார்கள்.

இதுவரை அவர்கள் இருபத்து நான்கு யோசனை தூரம் கடந்தார்கள்.

பசி தாகத்தால் வாடிய குந்திதேவி, மகனே! பீமா! நீ என்னை முதுகில் சுமந்தாலும் உன் வேகத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமல் மூர்ச்சை வருகின்றது. இனி ஒரு அடிகூட வைக்க வேண்டாம். துரியோதனுதியர்க்கு ஏன் அஞ்சி இப்படிப் போக வேண்டும். உன்னை வெல்லக்கூடியவன் உலகில் வேறு ஒருவன் இல்லை. எனக்கு நித்திரை வருகின்றது. என்னைப் படுக்கவை'' என்று கூறி அழுதாள்.

அங்கே விசாலமான ஒரு ஆலமரம். அதன் நிழலில் அவர்கள் தங்கினார்கள். குந்தியும் தருமரும் ''தண்ணீர் வேண்டும்'' என்றார்கள். நீங்கள் இங்கே யிருங்கள். நீர்ப் பறவைகளின் ஒலி கேட்கின்றது. நான்போய்த் தீர்த்தங் கொணருவேன்'' என்று பீமன் தண்ணீரை நாடிச் சென்றான்.

பீமனுடைய பிரிவு :

தாமரைத் தடாகத்தைக் கண்டான். களைப்பு நீங்க நீராடினான். தண்ணீர் பருகினான். தாமரையிலைகளைத் தொன்னைகளாகத் தைத்து அவற்றிலும் உத்தரிய ஆடையிலும் நீர் கொணர்ந்தான்.

மரத்தடியில் பயங்கரமான கானகத்தில் களைப்பின் மிகுதியால் குந்தியும் மற்றப் பாண்டவர்களும் அயர்ந்து உறங்கிக் கிடந்தார்கள்.

பீமன் அவர்கள் உறங்கும் பரிதாபத்தைக் கண்டான். ''இவர்கள் அரண்மனையில் உயர்ந்த பஞ்சணையில் படுத்திருந்தார்களே! இத்தரையில் விரிப்பு இன்றி அநாதைகளைப்

போல் தூங்குகின்ற இந்தத் துயரத்தைக் காண நான் என்ன பாவஞ் செய்தேனோ?

அம்மா! உனக்கு இந்த அவல நிலை வந்ததே. வசுதேவருடைய உடன்பிறந்த சகோதரி பாண்டு மாதேவி; எங்கள் அன்னை. விலையுயர்ந்த தங்கக் கட்டிலில் படுத்திருந்த இம்மாதரசி மரத்தடியில் கொடிய விலங்குகள் நிறைந்த காட்டில் வெறுந்தரையில் படுத்திருக்கின்றார்களே! பாவம், என் உடன் பிறந்தார்களின் பெருமையை அளவிட முடியுமா? பெருமை மிகுந்த அருமைத் துணைவர்கள் வெறுமையான புழுதியில் படுத்து உறங்குகின்ற பார்வத்தைப் பார்த்த இந்தக் கண்களைப் பிடுங்கி எறிய வேண்டாமா? அதர்மவான் துரியோதனன் சுகப்பட, நாம் துன்பப்படுகின்றோம். விதுரரால் உய்வு பெற்றோம்.

கொடியவனே! துரியோதனா! நாங்கள் மாண்டதாக நினைத்து மகிழ்ந்துகொண்டிருப்பாய்; என் தமையனார் எனக்கு அனுமதி தராமையால் நீ உன் உறவினருடன் வாழ்கின்றாய். பாதகனே! என் அண்ணன் அநுமதி தந்தால் இப்போதே உன்னை உன் சுற்றத்தாருடன் இயமனுடைய வீட்டுக்கு அனுப்பி விடுவேன். எலிகளை அடித்துக் கொல்வது போல் என் தண்டாயுதத்தால் உன் மண்டையை உடைத்துக் கொல்லுவேன். பொறுமையுள்ள தமையனார் உத்தரவு இல்லாமல் நான் என்ன செய்ய முடியும்?'' என்று கூறிக் கொண்டான். அவனுடைய கண்களில் முத்து முத்தாய் நீர் பெருகியது. மறுபடியும் சூடான பெருமூச்சு வந்தது. கைகளைப் பிசைந்து கொண்டான். கொடிய வனம். அச்சம் நிறைந்த காட்டில் அச்சமின்றி இவர்கள் உறங்குகின்றார்கள். விலங்குகளும் அரக்கர்களும் வாழும் வனம், இவர்களுக்குத் தீங்கு வரக்கூடாது என்று எண்ணி, இடையில் கரத்தை வைத்து எட்டுத் திசைகளையும் நோக்கி விழிப்புடன் காவல் புரிந்துகொண்டு நின்றான்.

— (தொடரும்)

திருக்கோயிலூர் வட்டம், கீழையூர் ஸ்ரீ வீரட்டேசுவரர் தேவஸ்தானத்தில் நிகழ்ந்த ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், சென்னைத் துணை ஆணையர் திரு. கே. இராஜா. B. A., B. L., அவர்களும், கடலூர் உதவி ஆணையர் திரு. ஆர். தண்டபாணி, B. Sc., B. L., அவர்களும், ஏனைய பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல் (23—11—69).

திருப்பாவை ஜீயர்

[மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.]

நம்முடைய சம்பிரதாயத்தில் எம்பெருமானார்க்குத் திருப்பாவை ஜீயரென்று பிரசித்தமான வியபதேசம் உள்ளது. திருப்பாவையில் மிக்க பக்தி கொண்டு, அதை அநுசந்திப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டவராய் எழுந்தருளியிருந்ததுபற்றி, அங்ஙனே வியபதேசம் உண்டாயிற்று என்பது தவிர, மற்றுமோர் சிறந்த ஏதுவும் உண்டு. அதாவது, திருப்பாவையில் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானாரைச் சந்திக்க வேண்டும் படியான சொற்றொடர்கள் அமைந்திருக்கின்றன வென்பதே. இஃது ஏறிட்டுரைக்கும் முறையிலன்றிக்கே, ஏற்ற முறையில் விவரிக்கப்படுமாறு காண்க. மீமாம்சை நூலில் விநியோகப்ருதக்த்வம் என்கிற நியாயம், ஈண்டுப் பெரும்பாலும் அநுசந்திக்கத் தக்கதாம்.

1. மார்கழித் திங்கள் :

(மதிநிறைந்த நன்னாள்) என்பதற்குச் சந்திரன் நிறைந்த நன்னாள் பரிபூர்ண சுக்கிலபட்சம் என்பது ஒரு பொருள். மதி - ஞானம்; அது நிறையப்போகிற நல்லநாள் என்பது உள்ளுறை பொருள். எம்பெருமானார் அவதரித்த நாள் இருள் தருமா ஞாலத்தவர்களுக்கு ஞானம் நிறைவதற்கு ஏதுவான நன்னாளன்றோ? 'நிறையப்போகிற' என்ன வேண்டுமிடத்து (நிறைந்த) என்றது காலவழுவமைதி என்பர் தமிழர். யதிராஜ ஸப்ததியில் 'அநபாய விஷ்ணுபத ஸம்ச்ரயம் பஜே' என்கிற சுலோகத்தினால் எம்பெருமானார் விலக்ஷன சந்திரனாகப் பிரதிபாதிக்கப்பட்டுள்ளார். அந்த யதிராஜ சந்திரன் தோன்றிய நன்னாள் என்னவுமாம். சித்திரைத் திங்களானது மனிதர்களுக்கு முதல்மாதம். மார்கழித்திங்களானது தேவர்களுக்கு முதல்மாதம். என்னும் பொருத்தமுளது. இது வியாக்கியானங்களிலும் விசதம், ஆகவே, சுவாமியின் அவதாரம் முதல் மாதத்திலென்கிற பிரசித்திக்குக் குறையில்லை.

2. வையத்து வாழ்வீர்காள் :

(பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்) திருப்பாற்கடலிலே துயின்ற பரமபுருஷன் க்ஷீராப்திநாதன். நம்மாழ்வார் ''உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன்'' என்கிற பாசுரத்தினால் பகவத் குணங்களைப் பாலாகப் பேசினார். அவர் தாமே அக்குணங்களைக் கடலாகவும் பேசினார் ''சீர்க்கடலையுள் பொதிந்த'' என்ற பாசுரத்தினால். இவற்றுக்குச் சார்பாக ''அநந்தகுணசாகரம் பிரம்மா'' (அனந்தமான குணசாகரத்தை யுடையவர்) பரமபுருஷர் என்றருளினார் ஸ்ரீ பாஷ்யகாரர். அவ்வளவோடு நில்லாமல் அக்குணங்களையே தமது திவ்வியக் கிரந்தங்களில் வாய்வெருவுவதும் செய்கின்றார். பகவத் குணசாகரத்திலே அஸ்தமிதாந்யபாவராய் இன்புறும் பரமர் எம்பெருமானார் என்க.

3, ஓங்கி உலகளந்த உத்தமன் :

'' மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து'' ''ஞானங்கனிந்த நலங்கொண்டு''

இத்தியாதிகளான நூற்றந்தாதிப் பாசுரங்களிற்படியே எம்பெருமானைவிட ஓங்கி அதிசயித்து, உலகத்தையெல்லாம் சுவாதீனமாக்கிக் கொண்ட உத்தமர் ஸ்ரீ ராமாநுசர் ஒருவரே. ஒருவர்க்கும் ஒன்றுஞ் சொல்லாதவர் அதமர். நிர்ப்பந்தத்தினுல் சொல்லுபவர் மத்யமர். தம்முடைய கருணையினுல் தாமே சொல்லுமவர் உத்தமர். 'ஒராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்' என்கிற உபதேசரத்தினமாலையின் படி, உத்தமர் ஸ்ரீ ராமாநுசர் ஒருவரேயாவர். நூற்றந்தாதியில் மற்றொருபேறு மதியாதென்கிற பாசுரத்திலும் இவர் உத்தமனுகக் கூறப்பட்டுள்ளார்.

4. ஆழி மழைக்கண்ணு ஒன்றுநீ கைகரவேல்:

இப்பாட்டில் எம்பெருமானுடைய ஆழியும் சங்கும் சார்ங்கமும் வருவதனுல் ''அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்'' என்கிற நூற்றந்தாதிப் பாசுரப்படிக்கு, பஞ்சாயுதாழ்வார்களின் பிராதுர்ப்பாவ விசேஷமான எம்பெருமானுர் நினைப்பூட்டப்படுகிறுர். ஒன்றும் நீ கைகரவேல் - அருமையாகப் பெற்ற அர்த்த விசேடங்களை ஒன்றும் ஒளித்திடாமல் பொழிந்த மேகம் இராமாநுசன் என்னும் சீர்முகிலே யாகும். ஆழியுள் புக்கு என்றவிடத்து ''உபநிஷத் துக்தாப்தி மத்யோத்ததாம்'' என்கிற ஸ்ரீ பாஷ்யகார திவ்யசூக்தி மிகப்பொருத்தமாக அநுசந்திக்கத்தகும்.

5. மாயனை மன்னு வடமதுரை :

ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கு எம்பெருமானுர். இடக்கை வலக்கை யறியாத இடையர்கள் வாழ்ந்தவிடம் திருவாய்ப்பாடி. அதில் தோன்றிய அணிவிளக்கு 'ஆயர்பாடிக்கு அணிவிளக்கே!? என்று யசோதைப்பிராட்டியால் அழைக்கப்படுகிற அச்யுத பாநுவான கண்ண பிரான். 'ந்ருபசு' என்று ஆளவந்தாரும், 'வ்ருத்த்யா பசுர் நரவபு' என்று மணவாள மாமுனிகளும் அருளிச்செய்த படி, பசுப்பிராயர்களான அஸ்மதாதிகள் வர்த்திக்குமிடமும் ஆயர்குலமாதலால், இருள் தருமா ஞாலமாகிற இவ்வாயர் குலத்திலே தோன்றிய அணிவிளக்கு - இராமநுச திவாகரர்.

6. புள்ளுஞ் சிலம்பினகாண் :

'புள்ளரையன் கோயில் வெள்ளை விளி சங்கு'' என்பது எம்பெருமானுர்க்கு மிகச் சிறந்த பிரத்யபிஜ்ஞ ஞாபகம். ''பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே'' என்றபடி பால்போன்ற நிறத்தது சங்கு; சுவாமி எம்பெருமானுரும் பால்போன்ற நிறத்தவர். இந்தச் சங்கு எங்கு வாழ்ந்ததென்னில், (புள்ளரையன் கோயில்) ''பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும் புனலரங்கமே'' என்று பெரியாழ்வார் புள்ளரையன் கோயிலாகக் கூறிய திருவரங்கத்தில் வாழ்ந்தது. சக்கரம் சங்கு என்ற இரண்டு திவ்வியாயுதங்களில் சக்கரமானது ''கருதுமிடம் பொருது'' என்ற அருளிச் செயலின்படியே பலவகைக் காரிய விசேடங்களுக்காகப் புறச் சஞ்சாரங்கள் செய்து கொண்டே இருக்கும். திருச்சங்கு அப்படியன்றியே ''உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே'' என்னும்படி யிருக்கும். சுவாமி தாமும் ஸ்ரீரங்கநாதன் கட்டளையைப் பெற்றுக் கோயிலே கதியாயிருந்தவர். ஆகவே 'கோயில் சங்கு' என்றது சுவாமி எம்பெருமானுர்க்கு மிகப்பொருத்தம்.

7, கீசுகீ சென்றெங்கும் :

(கலந்து பேசின பேச்சரவம்) பூர்வாசாரிய சூக்திகளோடே கலந்திருக்கும்படி (அவற்றுக்கு முரண்படாதபடி) ஸ்ரீசூக்தி அருளிச் செய்தவர் ஸ்ரீராமாநுசர் என்பது இவருடைய திவ்ய சூக்தியினுற் சித்தம். ஸ்ரீ பாஷ்யம் தொடங்கும் போதே அதனைக் குறிப்பிட்டு அருளிச்செய்தவர் சுவாமி ஒருவரேயன்றோ! அன்றியும் கலந்து பேசுவதாவது வடமொழி தென்மொழிகளைக் கலந்து மணிப்பிரவாளமாகப் பேசுவது. இத்தகைய கிரந்தம் முதன் முதலாகத் திருவாறுயிரப்படியே தோன்றியது. அது பிள்ளான் அருளியதாயினும், ''எதிராசர் பேரருளால்'' என்று மணவாளமாமுனிகள் அருளிச் செய்தபடியே, சுவாமி கற்பித்த நடையேயாம் அது. ஆகவே இருமொழிகளைக் கலந்து பேசின பேச்

சுக்கு நிதான பூதர் சுவாமியென்று குறிப்பிட்ட வாறு.

8. கீழ்வானம் வெள்ளென்று :

(மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து) என்றதில் சுவாமியின் பிரபாவமே நன்கு வெளிப்படும். தமது திருவடி சம்பந்தத்தாலே பின்னோர்களை யும் திருமுடி சம்பந்தத்தாலே முன்னோர்களையும் வாழ்வித்தவர் சுவாமி எம்பெருமானார். மிக் குள்ள பிள்ளைகள் என்றது சுவாமிக்கும் வழி படத்தக்கவர்களாயிருந்த முன்னோர்களை. அவர் களைப் போகாமல் காத்து என்றது, தாம் அவ தரித்து அவர்களை நற்கதி எய்துவித்தபடியைக் காட்டுவதாம்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் :

(மணிக்கதவம் தாள் திறவாய்) மணி யென்று இரத்தினத்திற்குப் பெயர். நவரத் தினங்களாகையாலே ஒன்பது என்கிற எண் குறிக்கப்படுகின்றது. கதவு என்பது பதார்த் தங்களைச் சேமித்துவைப்பது. சுவாமியினு டைய திவ்வியக்கிரந்தங்களே இங்குக் கதவென் பன. சுவாமி அருளிச்செய்தவை ஸ்ரீ பாஷ்யம் வேதாந்த தீபம், வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்தியம், ஸ்ரீரங்க கத்தியம், ஸ்ரீவைகுண்ட கத்தியம், நித் தியம் என்று ஒன்பது திவ்வியக் கிரந்தங்கள் ஆகையாலே அவையே இங்கு மணிக்கதவம் எனப்படுகிறது. அவற்றைத்திறக்கவேணும் என் றது - அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்கள் எங்களுக்கும் நிலவாம்படி விளக்கி யருள வேணும் என்றபடி.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற :

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் அருங்கலமே! என்ற இரண்டு விளிகளிலும் சுவாமியின் குறிப்பு நன்கு உண்டாகும். நோற்று என்றது மகாவாக்கிய வசத்தாலே என்றபடி. சுவர்க்கம் புகுகின்ற—வர்க்க மென்று சமூகத்திற்குப் பெயர்; ஒரு வகுப்பு என்றபடி. (சு) என்பதனால் மிகச்சிறந்த வகுப்பு என்றதாகும். யாதவப் பிரகாசரி டத்திலே வாசித்துக்கொண்டிருந்து அவர் சாயையிலே ஒதுங்கியிருந்த சுவாமி, அவருடைய கருத்தின்படியே ஆபத்துக்களை அடைந்து போகாமல். நம்போலியர்களின் பாக்கியவசத்தாலே பெருந்தேவி மணவாளனை பேரருளாளனது பரம கிருபைக்கு இலக்காகி ஸ்ரீவைஷ்ணவ வகுப்பிலே புகுந்து அனைவருக்கும் தாயாக இருந்தவர். சுவர்க்கம் என்பதற்கு சுவர்க்க மென்றே பொருளானாலும் ''யஸ் த்வயா ஸஹஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா'' என்ற ஸ்ரீராமாயணத்தின்படி எம்பெருமானோடு கூடப்பெற்றவர் என்ற தாகும். சித்தாசிரமத்தில் நின்றும் வருகிறோ மென்று சொல்லிக்கொண்டு வந்த வேடனும் வேடுவிச்சியுமான பகவத்தம்பதிகளோடே கூடப்பெற்றமை கூறினபடி. அருங்கலமே! என்றது அருமை பெருமை வாய்ந்த ஆபரணமே! என்றும், உத்தம சத்பாத்திரமே! என்றும் பொருள்படும். நம்முடைய குருபரம் பரையிலே சிறப்பின் மிக்க அணிகலனாக விளங்குபவர் சுவாமி எம்பெருமானாரே யாவர்.

11. கற்றுக் கறவைக் கணங்கள் :

இப்பாசுரத்தில் கற்றுக் கறவை என்று தொடங்கிக் கோவலர்தம் பொற்கொடியே! என்னும் அளவுமுள்ள விளி முழுவதும், எம்பெருமானார் தன்மையையே தெரிவிக்கு மதாயிருக்கும். கற்று ''சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன்'' என்ற நூற்றந் தாதிப் பாசுரப்படியே எல்லாக் கல்விகளையும் கற்று; (கறவைக் கணங்கள் பல கறந்து) 'பஞ்சாசார்ய பதாச்ரித' என்று யதிராஜ வைபவத்தில் கூறியுள்ளதை விவரிக்கிறபடி. பசு பதினான்கு லோகங்களையும் தன்னுள் வகிக்குமாபோலே பதினான்கு வித்தைகளையும் தம்முட் கொண்டு நன்றாகக் கறக்கும் ஆசாரியர் கள் பலரிடத்திலும், ஸத்சம்பிரதாயார்த் தங்கள் கேட்டு உய்ந்தவர் சுவாமி. பெரியநம்பி பக்கலிலே பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று மந்த்ரார்த்தங்கள் கேட்டும், பெரிய திருமலை நம்பி பக்கலிலே ஸ்ரீராமாயணார்த்தம் கேட்டும், திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே இரகசியார்த் தங்கள் பயின்றும், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிப் பொருள்

கேட்டும், ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே அருளிச்செயல் கற்றும், நல்வார்த்தைகள் கேட்டும் போந்தவராகையாலே, ''கறவைக் கணங்கள் பலகறந்து'' என்றது சுவாமிக்கு மிகப்பொருத்தம். அதற்குமேல் (செற்ருர் திறலழியச் சென்று செருச்செய்யும்) எம்பெருமானை நிர்க்குணனென்றும் நிர்விபூதி கனென்றும் நிர்லக்ஷ்மீகனென்றும் திவ்யமங்கள விக்கிரக சூந்யனென்றும் சொல்லுமவர்கள் - செற்ருர்; அவர்களுடைய திறலழிய - வாக்கு மிடுக்குத் தொலையும்படியாக, திசைதொறும் எழுந்தருளி வாதப்போர் நிகழ்த்தியவர் சுவாமி. ''விப்ரம் நிர்ஜித்ய வாதத:'' என்கிறபடியே இது குற்றமாகையன்றிக்கே சித்தாந்த ரட்சணார்த்தமாகச் செய்த தாகையாலே நற்றமேயாயிற்றென்று காட்டக் 'குற்றமொன்றில்லாத' என்றது. கோ என்னும் வடசொல் நானார்த்தகமாகையாலே ஸ்ரீசூக்தியையும் சொல்லக்கடவது; கோ வல்லவர் - மகாவித்துவான்கள். அவர்தம் பொற்கொடி - சுவாமி. கோ அ(ல்)லர் - சுவதந்திரர் அல்லர்.

12. கனைத்திளங் கற்றெருமை :

சுவாமியின் திருவவதாரத் தலமான ஸ்ரீபெரும்பூதூரில் இரட்டித்துச் சேவிக்கும் பாசுரம் இது. பூருவாசாரியர்களும் தங்கள் வியாக்கியானங்களின் முடிவிலே எம்பெரு மானாரைப் பிரஸ்தாவித்திருக்கும் பாசுரமுமிது. இங்கு இவ்வளவே நாமெழுதப் போதும். ஆயினும் சிறிது விவரிக்கலாகிறது. இப் பாட்டில் நற்செல்வன் என்றது சுவாமியைக் கருதி. நற்செல்வன் என்பதை வடமொழியில் கூறவேணுமானல் லக்ஷ்மி ஸம்பந்ந: என்ன வேணும். ஸ்ரீராமாயணத்தில் 'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:' என்னப்பட்ட இளைய பெருமாளே யன்றே இளையாழ்வாராகத் திருவவதரித்தவர். அவர் ''அஹம் ஸர்வம் கரிஷ்யாமி'' என்று விபவாவதாரத்திலே அடிமை செய்யப்பெற்ருர்; இவர் ''நித்ய கிங்கரோ பவாநி''. என்று அர்ச்சாஸ்தலங் களிலே ஒப்புயர்வற்ற அடிமைகள் செய்யப் பெற்ருர். ''மன்னிய தென்னரங்காபுரிமாமலை மற்றும் உவந்திடும் நாள்''.

13. புள்ளின்வாய் கீண்டானை :

இப்பாட்டில் 'கள்ளந் தவிர்ந்து கலந்து' என்றது உயிரான சொற்றெடர். ஆத்மா பஹாரக்கள்வம் ஒன்றுண்டு; அது தவிர மற்றெரு கள்வம் கேண்மின்; 'இன்கனி தனியருந்தான்' என்கிறபடியே போக்கிய பதார்த்தங்களைப் பலரோடுங்கூடி யனுபவித்துக் களிக்கையன்றிக்கே அசலறியாதபடி அனுப விக்கை கள்வம்; எம்பெருமானுர்க்கு முற்பட்ட ஆசாரியர்களிடத்து இத்தகைய கள்வம் இருந்தது; அதனைத் தவிர்ந்தவர் சுவாமி ஒருவரே. தவிர்ந்து எல்லாரோடுங் கலந்து அனுபவித்தவர். ''பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்'' என்றதும் சுவாமியின் பெருமையை நினைப்பூட்டும். பாவைக்களம் என்பது காலட்சேப மண்டபம்; அதில் எல்லோரும் புகழ்பெற்றது சுவாமிக்கு முன்பு இல்லை; அதிகாரப் பரீட்சை பண்ணிப் பலர் விலக்கப்பட்டிருந்தார்கள் அன்றே. ஆசைக்கு மேற்பட அதிகார சம்பத்தியில்லை என்று கொண்ட சுவாமியின் காலத்தில்தான், பிள்ளை களெல்லோரும் பாவைக்களம் புக்கார், அதனை நன்கு காட்டினபடி.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து :

இப்பாட்டில் ''செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின'' என்பதில் சுவாமியின் திவ்வியப் பிரபாவம் ஒன்று நினைவுக்கு வரும். ''சுவாமி யாதவப் பிரகாசரிடத்திலே பூர்வ பட்ச வேதாந்தம் வாசித்தபோது, சுருதிவாக் கியங்களுக்கு அவர் அபார்த்தம்கூற, சுவாமி இப்படியன்றே பொருள், என்று பொருத் தமான பொருள் அருளிச் செய்ய, மேல் வாய் திறக்கமாட்டாதே ஊங்காரமே பண்ணிப் போந்ததாக வைபவ நூல்கள் விளம்புகின்றன. அது இங்கு நினைவுக்கு வரும். சுவாமி திருவாய் மலர்ந்தருளியது செழுங்கழுநீர் வாய்நெகிழ்ந் தமை; யாதவப் பிரகாசர் மறு மாற்றம் சொல்லமாட்டாமே வாய் மூடிக் கிடந்தது ஆம்பல்வாய் கூம்பினமை. மேலே 'செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்ருர்' என்ற தும் சுவாமிக்கு மிகப்பொருத்தம். செங்கல்

பொடிக் கூறை—சுவாமி காவியுடை தரித்த திவ்விய மூர்த்தி. வெண்பல்—பிறர்பாடே பல்லைக் காட்டப் பெருதவர். தவத்தவர்—மம, மம என்னாதே 'தவ, தவ' என்று சேஷத்துவம் பரிமளிக்க நிற்பவர். தங்கள் திருக்கோயில்—அமுதனாருடைய ஆதீனத்திலிருந்து கோயில் தங்கள் திருக்கோயிலென்னும்படி தம் அதீனமாகப் பெற்றவர். சங்கிடுவான்—'சங்க' என்ற வடமொழி சங்கு என்று திரிவதுபோல் 'சங்கு' என்ற வடமொழியும் சங்கு எனத் திரியும். இச்சொல் திறவுகோல் என்னும் பொருளைத் தரும். ஆருயிரப்படியில் இப் பொருளும் பணிக்கப்பெற்றது. உடையவர், ஆழ்வான் மூலமாகத் திருக்கோயில் திறவுகோலைப் பெற்ற இதிகாசம் இச்சொற்றொடரில் அநுசந்திக்கலாகிறது.

158576

15. எல்லே இளங்கிளியே :

இப்பாட்டில் ''உனக்கென்ன வேறுடையை'' என்னுஞ் சொற்றொடர் நிதியானது. உமக்கு மட்டும் அசாதாரணமான பெருமை என்னே! என்று வியந்து கூறப்பட்டுள்ளது. சுவாமிக்கு முன்னே நம்மாழ்வாரும் ஸ்ரீமந்நாதமுனிகளும் ஆளவந்தாரும் நம் தரிசனத்திற்கு நிர்வாகர்களாயிருக்கச் செய்தேயும் 'நம்மாழ்வார் தரிசனம்' என்றோ 'நாதமுனிகள் தரிசனம்' என்றோ 'ஆளவந்தார் தரிசனம்' என்றோ வழங்கற்பாடு வாராமே. 'எம்பெருமானார் தரிசனம்' என்றே நிகழ்ந்து வருகைக்கு ஈடான சுவாமியின் அசாதாரணமான பெருமை இங்கு அநுசந்திக்க உரியது. 'மாற்றாரை மாற்றழிக்க வல்லான்' என்ற இடத்தில் ''தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும்...நீசரும் மாண்டனர்''. ''சாறுவாக மதம் நீறுசெய்து'' இத்யாதிகள் நினைவுக்கு வரும்.

16. நாயகனாய் நின்ற நந்தகோபன் :

நம்முடைய குருபரம்பரை ஆகிய மாலையில் நாயகமணியாய் விளங்குபவர் சுவாமி. (நந்தகோபன்) தனக்கு ஔரஸ புத்திரனில்லாமல் ஆயர்புத்திரன் அல்லன். அருந்தெய்வம் என்னப்பட்டவொரு தெய்வத்தைப் புதல்வனாகக் கொண்ட நந்தகோபன்போலே சுவாமியும் ''யதிராஜ ஸம்பத் குமாரா!'' என்னும்படி செல்வப் பிள்ளையைத் தம் புத்திரராகப் பெற்றவர். (உடைய) உடையவரென்கிற திருநாமம் குறிக்கப்படுகின்றது என்று கொள்ளக் குறையில்லை. (கோயில் காப்பான்) ஸ்ரீமந்! ஸ்ரீரங்க ச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய என்னும்படி ஸ்ரீரங்க ஸ்ரீயைக் காத்தருளினவர் சுவாமி. (கொடித்தோன்றும் தோரண வாசல் காப்பான்). ''உபய விபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷிக்தா!'' என்பது சுவாமிக்குக் கட்டியம். கீழ் கோயில் காப்பானே என்பதனால் லீலா விபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் சொல்லிற்று. இங்கு நித்ய விபூதி சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் சொல்லுகிறது. "கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்'' ''நெடுவரைத் தோரணம் நிறைத்து எங்கும் தொழுதனர் உலகே'' என்னும்படி கொடித்தோன்றும் தோரணவாசல் நித்திய விபூதி வாசல்; அதையும் பிறர்புகாதபடி காத்தருள்பவர் சுவாமி.

17. அம்பரமே தண்ணீரே :

அம்பரத்தையும் தண்ணீரையும் சோற்றையும் அறம் செய்தவர் சுவாமி. நிகண்டின்படி அம்பரமாவது ஆகாசம்; பரமாகாசம் எனப்படுகிற பரமபதம். அதையும், விரஜையாகிற தண்ணீரையும், உபநிஷத்தில் அன்னமாகச் சொல்லப்பட்ட பரப்பிரம்மாநுபவத்தையும் (அறஞ்செய்யும் எம்பெருமான்) கிருபாமாத்திரப் பிரசந்நாசார்யராய் உபகரித்தருளினவர் எம்பெருமானார். மேலே ''அம்பரம் ஊடறுத்து ஓங்கியுலகளந்த உம்பர் கோமான்'' என்றதும் எம்பெருமானாரை நன்கு நினைப்பூட்டும்.

(தொடரும்)

தமிழக ஆலய ஊழியர்கள் சங்க மாநாடு, சிக்கல் நவநீத ஈசுவர சுவாமி கோயில் திருமண மண்டபத்தில் நடைபெற்றபோது, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A., அவர்கள் மலர்க் கிரீடம் சூட்டிச் சிறப்பிக்கப் பெறுதல் (21—12—69).

சிக்கல் நவநீதேசுவர சுவாமி கோயில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக ஆலய ஊழியர்கள் சங்க மாநாடு, கடவுள் வாழ்த்துடன் தொடங்கப் பெறுதல் (21—12—69).

இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி கோயிலுக்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு. திரு. வி. வி. கிரி அவர்கள், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B. A., அவர்களின் தலைமையில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S. அவர்களால் வரவேற்புரை வாசித்தளித்துச் சிறப்பிக்கப்பெறுதல். (19—11—69)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.